*கவனிக்க.- 2018.10.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2093 - 2018 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2093 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1590 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1614 |
| துணைவிதிகள் | 1620 |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1636 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2018, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் – வெற்றிடம்

## கல்கமுவ பிரதேச சபை

வடமேல் மாகாணத்தில் அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள சுகாதார நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தல் மூலம் உரிய தகைமைகளைக் கொண்ட கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | வேலை/ வெளிக்களத் தொழிலாளர் | 02 | (பொ.நி.சு. 3/2016) பீ. எல்-1-1 ரூ. 24,250-10X 250-10X270 - 10X300-12X330-ரூ. 36,410 | க.பொ.த (சா.த.) பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர்ந்த) |
| 02. | சுகாதாரத் தொழிலாளர் | 01 | (பொ.நி.சு. 3/2016) பீ. எல்-1-1 ரூ. 24,250-10X 250-10X270 - 10X300-12X330-ரூ. 36,410 | பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பில் (9 ஆம் தரம்) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும். |
| 03. | சுகாதார தொழிலாளர் (ஒப்பந்தம்) | 06 | (பொ.நி.சு. 3/2016) பீ. எல்-1-1 ரூ. 24,250-10X 250-10X270 - 10X300-12X330-ரூ. 36,410 | பாடசாலை ஒன்றில் 8 ஆம் வகுப்பில் (9 ஆம் தரம்) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும். |

**02. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகக் கூடிய வயதெல்லை பார்க்கப்பட மாட்டாது.)

(iv) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராகவோ, அரச, உள்ளூராட்சி/ மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**03. சேவைக்குச் சேர்த்துக் கொள்ளலும், விண்ணப்பித்தலும்:**

1. சேவை அவசியத்தைப் பொருத்து உரிய முறையிலான நேர்முகப் பரீட்சை, செய்முறை பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
2. தற்போது கல்கமுவ பிரதேச சபையில் குறிப்பிட்ட பதவிகளில் அமைய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சேவையில் உள்ள ஊழியர்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்படும்.
3. உரிய தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.
4. ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சுகாதார தொழிலாளிகள் இரண்டு ஆண்டு காலத்திற்கு அல்லது உரிய தொழில் /செயற்திட்டம் முடிவுறும் வரையில் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் முதலில் தோன்றுகின்ற சந்தர்ப்பம் வரை சேர்த்துக் கொள்ளப்படுவர்.
5. தகைமை உள்ளவர்களை தெரிவு செய்தல் தொடர்பாக கல்கமுவ பிரதேச செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**04. சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான உடன்படிக்கை**

1. வலை/வெளிக்கள தொழிலாளர், சுகாதார தொழிலாளர் நிரந்தர ஓய்வூதியம் உடையது.
2. உரிய வண்ணம் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உள்ளாதல் வேண்டும்.
3. ஆட்சேர்ப்பு செய்து கொள்ளப்படும் ஒருவர் 03 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்படுவதுடன், தரப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்படுவாராயின் ஒரு வருட காலத்திற்கு வேலைப் பார்க்கும் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

4. அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக விஷேடமாக அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காகவும், தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதும் இதன் பின் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு உடன்படல் வேண்டும்.

5. ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற சுகாதார தொழிலாளிகள் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்கேற்க வேண்டும்.

6. இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக கௌரவ வடமேல் ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டுள்ள சேவை சட்டதிட்டங்களுக்கும், நிதி சட்டத்திட்டங்களுக்கும் அரச திணைக்கள கோட்பாடுகளுக்கும் வடமேல் மாகாண சபையினால் அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக் குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சட்டத் திட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதலுக்கு விண்ணப்பதாரி உடன்படல் வேண்டும்.

**05. விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை:**

1. மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தினை 2018.10.26 ஆந் திகதிக்கு முன்னர் ‘செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ ’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

2. விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;
(ii) கல்விச் சான்றிதழ்கள்;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ்;
(iv) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ்கள் இரண்டு;
(v) தொழில்சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்;

ஏ. பி. நிமல் ரத்நாயக,
செயலாளர்,
பிரதேச சபை கல்கமுவ.

கல்கமுவ பிரதேச சபை அலுவலகம்,
2018, ஒற்றோபர் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபையின்**

.............................................................................................................. பதவிக்கான விண்ணப்பப்படிவம்

01. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ..........................................................................................
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ..........................................................................................

02. நிரந்தர முகவரி : ..........................................................................................

03. (i) பிறந்த திகதி : ஆண்டு :.......................................... மாதம் : ............................................ திகதி: ...........................................
(ii) 2018.10.26 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் :........................ மாதங்கள்: ................................ நாட்கள்: ................................

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

05. பால் : (ஆண் /பெண்) : ..........................................................................................

06. திருமணமானவரா? திருமணமாகாதவரா ?: ..........................................................................................

07. இனம் : ..........................................................................................................................................................

08. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிட காலம் ? ..........................................................................................

09. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா ? ..................................................

10. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :

(i) சித்தியடைந்த வருடமும் சுட்டெண்ணும் :

(ii) க.பொ.த (சா./த.) பரீட்சை :

சுட்டெண் : ............................................ ஆண்டு : ......................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க.பொ.த (உ./த.) பரீட்சை :

சுட்டெண் : ............................................ ஆண்டு : ......................

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் : ................................................................................................

12. நீங்கள் தற்போது இப் பிரதேச சபையில் சேவை புரிவதாயின் அச் சேவைக் காலம் மற்றும் விபரம்: ........................................
.......................................................................................................................................................................
.......................................................................................................................................................................

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி உள்ளீரா ? ..........................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும் பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும் பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ் படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

........................................................

திகதி : ................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானதும் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிப்பதற்கு உடன்படுவதாகவும் தற்போது ..................................................................... ஆக சேவை புரிகின்றார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................................,

திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்

திகதி : ........................................... (பதவி முத்திரையினை இடவும்)

10-1232

## கொட்டகல பிரதேச சபை

ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற, தேர்ச்சி அற்ற சேவைப் பிரிவின் கீழ் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2018

மத்திய மாகாண அரச சேவையின் கொட்டகலை பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கான கொட்டகலை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவினைக்கொண்ட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.10.26 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், கொட்டகலை பிரதேச சபை, கொட்டகலை" எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் '.......................... பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2018' என்று குறிப்பிடப்படல் வேண்டும். வெவ்வேறு பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். அத்துடன் பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப் படவுள்ள நிலையம் மற்றும் கடமைகள் | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01. | சாரதி தரம் III | 02 | கொட்டகலை பிரதேச சபையின் அடிப்படைத் தேவையான போக்கு வரத்து தொடர்பான பணிகளில் பிரதேச சபை நிறுவனத் தலைவரது பணிப் புரைக்கமைவாக கடமைகளை செய்தல் | ரூ. 25,790 - 10X270-10X300-10X330-12X350 - ரூ. 38,990 (பொ.நி.சு. 03/ 2016) PL-3 சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள்**<br>க.பொ.த.(சா./த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற் தகைமைகள்:**<br>34 ஹொன்டர் தாரின் நிறைக்கு அதிகமான பார மோட்டார் வாகனம், டிரேலர் மற்றும் 32 பயணிகளுக்கு மேற்படாத எண்ணிக்கையிலான பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்க சாரதி அனுமதி பத்திரம் அதாவது மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட 'A' தர சாரதி அனுமதிப்பத்திரம் (புதியதெனின் A1/A/B1/B/C/1/C/ CE/DI/D/G1/G/J) ஆகிய வகுப்பு களுக்கான அனுமதிப் பத்திரம்.<br><br>**அனுபவம் :**<br>மோட்டார் வாகனம் செலுத்தும் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் வாகனச் சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப் படவுள்ள நிலையம் மற்றும் கடமைகள் | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | **உடல் தகைமை :** ஆகக் குறைந்தது 5 அடி 2 1/2 அங்குல உயரம் இருத்தல் வேண்டும். சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். பகல், மற்றும் இரவு நேரங்களில் சேவை செய்வதற்கு போதுமான உடல், உள தகைமை இருத்தல் வேண்டும். வீதி ஒழுங்கு விதிகள் பற்றிய பூரண அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். **ஆட்சேர்ப்பு முறை** (see table below) |
| 02. | வீதி சுத்தி கரிப்பு தொழிலாளர் தரம் III | 13 | கொட்டகலை பிரதேச சபை எல்லைப் பகுதியில் உள்ள வீதி இரு மருங்கிலும் உள்ள வடி காண்களை துப்புரவு செய்தல், தார் போடுதல், புற்களை வெட்டுதல், வீதி கடவை மஞ்சள் கோடுகளை வரை வதற்கு உதவி புரிதல், பிரிமிக்ஸ் தயாரிப்பதற்கு உதவி செய்தல், பாதையைப் பெருக்கி சுத்தம் செய்தல், கழிவுகளை சேகரித்து கழிவு சேகரித்து கழிவு சேகரிப்பு வண்டிகளுக்கு போடுதல், பொது மலசலகூடம் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்தல் உள்ளடங்கலாக சுத்திகரிப்பு கடமைகளில் ஈடுபடுதல் | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 (அ.நி.சு. 03/2016) PL-1 -2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு(02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்யாதோர் இருக்கும் பட்சத்தில் ஐந்தாம் தரத்தில் கற்றோர் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**ஆட்சேர்ப்பு முறை**

| முறை | வீதம் |
|---|---|
| திறந்த முறை | 70% |
| மட்டுப்படுத்தப் பட்ட முறை | 30% |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப் படவுள்ள நிலையம் மற்றும் கடமைகள் | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 03. | சுகாதார தொழிலாளர் தரம் III | 06 | கொட்டகலை பிரதேச சபை எல்லைப் பகுதியில் உள்ள வீதி இரு மருங்கிலும் உள்ள வடி காண்களை துப்புரவு செய்தல், புற்களை வெட்டுதல், தார் போடுதல், பிரிமிக்ஸ் தயாரிக்க உதவுதல், பாதையைப் பெருக்குதல், கழிவறை தொடர்பான கடமைகள், குப்பைக் கழிவுகளை சேர்த்து டிரக்டருக்கு அல்லது லொறிக்கு ஏற்றுதல் பொது மலசலகூடம் மற்றும் கழிப்பறை சுத்தம் செய்தல் உள்ள அடங்கலாக சுத்திகரிப்பு கடமைகளில் ஈடுபடுதல் | ரூ. 24,250 - 10X250- 10X270-10X300-12X330 - ரூ. 36,410 (அ.நி.சு. 03/2016) PL-1-2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத் திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>மேற்படி தகைமைகள் பூர்த்தி செய்யாதோர் இருக்கும் பட்சத்தில் ஐந்தாம் தரத்தில் கற்றோர் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04. | மின்தகன சாலை இயக்குனர் உதவியாளர் தரம் III | 01 | கொட்டகலை பிரதேச சபைக்கு சொந்தமான மின்தகன சாலையில் அனைத்து வேலை களுக்கும் உதவுதல் | ரூ. 24,250 - 10X250- 10X270-10X300-12X330 - ரூ. 36,410 (அ.நி.சு. 03/2016) PL-1- 2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு (02) பாடங்களில் திறமை சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 05. | அலுவலக உதவியாளர் தரம் III | 02 | கொட்டகலை பிரதேச சபை தொலைபேசி இயக்குநராக கடமை யாற்றல், புத்தகம் கட்டும் பணி அல்லது ஆவண காப்பாளராக கடமை யாற்றல், நிழற்பிரதி இயந்திர இயக்குனராக, அஞ்சல் விநியோக கடமை, வரவேற்பாளர், அலுவலக உதவியாளராக அலுவலகத்திலும் வெளியிலும் செயற்படல், மின்சாதன இயக்குனராக செயற்படல். | ரூ. 24,250 - 10X250- 10X270-10X300-12X330 - ரூ. 36,410 (அ.நி.சு. 03/2016) PL-1 -2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப் படவுள்ள நிலையம் மற்றும் கடமைகள் | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 06. | நீர் விநியோக தொழிலாளர் தரம் III | 02 | கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் நீர்க்குழாய் பொருத்துதல், திருத்த வேலைகள் செய்தல் மற்றும் காண் வெட்டும் வேலை. | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 (அ.நி.சு. 03/2016) PL-1- 2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (02) பாடங்களில் திறமை சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரு தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 07. | மின்னியலாளர் தரம் III | 01 | கொட்டகலை பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள், வீதி விளக்குகள் பராமரிப்பு வேலைகள் மற்றும் நிறுவனத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு செய்வதற்கு பணிக் கப்படும் கடமைகள். | ரூ. 25,250 - 10X270-10X300-10X330-12X350 - ரூ. 38,450 (அ.நி.சு. 03/2016) PL-2-2016) சம்பள அளவின் 1 ஆம் நிலை ஆரம்ப சம்பள நிலையாகக் கருதப்படும் (4 ஆவது சம்பள நிலையைக் கடக்கும் முன் வினைத்திறன் காண் தடை தாண்டல் உண்டு) | **கல்வித் தகைமைகள் :** க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ் அல்லது சிங்கள மொழி உட்பட இரண்டு பாடங்களில் திறமை சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற் தகைமைகள் :** பதவியின் பணிக்கடமைகளுக்கு ஏற்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழு வினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தகுதியான பாடநெறியொன்றில் வெற்றி கரமாக சான்றிதழ் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2 ஆவது மட்டம் (NVQ 2) அல்லது 3 ஆவது மட்டம் (NVQ 3) சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் திணைக் களத்தில் (DTET) தொழிலுக்குரிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் (NYSC) தொழிலுக்குரிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாட நெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழிலுக்குரிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப் படவுள்ள நிலையம் மற்றும் கடமைகள் | சம்பள அளவுத் திட்டம் | தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | பெற்றிருத்தல்; அல்லது தேசிய மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் (NAITA) நிறுவனத்தில் தொழிலுக்குரிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>**அனுபவம் :**<br>குறித்த துறையில் 02 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

**பொதுவான தமைமைகள் :**

(i) விண்ணப்பதாரி பரம்பரையில் அல்லது பதிவு செய்ததன் பிரகாரம் இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ii) விண்ணப்பதாரி நன்னடத்தையுடன் கூடிய சுகதேகியாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு விண்ணப்பதாரி கொட்டகலை பிரதேச சபையின் எல்லைக்குள் கடந்த 03 வருட காலத்திற்குள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். (வாக்குரிமை, பெயர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும்.)

(iv) விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண மட்ட அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஊழியர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.)

(v) விண்ணப்பதாரி குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதவிக்கும் உரிய குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பதாரி ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய முறையாக நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி அதன் மூலம் பெறும் உச்ச புள்ளிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(vii) சாரதிப் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் எழுத்துப் பரீட்சைக்கு தோன்றுதல் வேண்டும். மேலும் தேவையான சகல தகைமைகளையும் கொண்டிருப்பதுடன் கூடிய புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் தொழிற்தகைமை பெறுபேறுகளின் அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவர். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய உடல், உள ஆரோக்கியமானவராகவும் கல்வி, தொழில்சார் மற்றும் பொதுத் தகைமைகளை பரீட்சிக்கும் முறையான நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் (பகுதிதேர்ச்சி பெற்ற, தேர்ச்சி அற்ற பதவிகளுக்கான) பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளின் படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மோட்டார் வாகன பரிசோதகரின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் தகைமைப் பெறுதல் வேண்டும்.

(viii) விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்து கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது கொட்டகலை பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

(ix) தற்பொழுது கொட்டகலை பிரதேச சபையில் அமைய/தற்காலிக/ஒப்பந்த/கொடுப்பனவு அடிப்படையில் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை சமர்பித்தல் வேண்டும்.

(x) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட திட்டங்களுக்கமைவாகவும் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமையவும் கொட்டகலை பிரதேச சபையில் தற்பொழுது நடைமுறையிலிருக்கின்ற, எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சட்டதிட்டங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(xi) அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(xii) தேவையான விண்ணப்பங்கள் கிடைக்காதபட்சத்தில்அருகில் இருக்கும் பிரதேச சபைகளிலிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் கவனம் செலுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள் :**

1. இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
2. விதவைகள் மற்றும் அநாதைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும்.
3. தெரிவு செய்யப்படுபவர்கள் பதவி 03 வருட கால சேவைக் காலத்திற்கு உட்படுவதுடன் அவ் 03 வருட கால இறுதியில் சேவை, வருகை, ஒழுக்கம் என்பன திருப்திகரமாக இருக்குமாயின் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.
4. அரச மொழிக் கொள்கையின்படி தேவையான மொழித்தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபனவிதிக் கோவையின் IIஆம் அத்தியாயத்தின் பொதுவான நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
6. சிறந்த குணநலன்கள் கொண்டவராக இருப்பதுடன் இச்சபை எல்லையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்யக்கூடிய உடல், உள தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
7. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
8. அரச அல்லது மாகாண அரச சேவையில் நீக்கப்பட்டவராக இல்லாதிருப்பதோடு அரச நிர்வாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் இளைப்பாறியவராக இருத்தல் கூடாது. கொட்டகலை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இடமாற்றங்களுக்கு உட்பட்டது.
9. வினைத்திறமையின்மை மற்றும் திருப்தியற்ற சேவை காணப்பட்டால் சபையின் விருப்பத்திற்கு அமைய சேவையை முடிவுறுத்தும் அதிகாரம் பிரதேச சபைக்குரியதாகும்.

**விண்ணப்பம் கோரப்படும் முறை:**

விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி A4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2018.10.26 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் "செயலாளர், கொட்டகலை பிரதேச சபை, கொட்டகலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள் அல்லது சேர்த்துக் கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ் அறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்துவது போன்ற முழு அதிகாரமும் கொட்டகலை பிரதேச சபையின் செயலாளருக் குரியதாகும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழற் படப்பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுவதுடன், மூலப்பிரதி நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(i) பிறப்புச்சான்றிதழ்;
(ii) தேசிய ஆள் அடையாள அட்டை;
(iii) கல்விச் சான்றிதழ்கள்;
(iv) அன்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் ( பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்);
(v) தொழில் தகைமைகளுக்கான சான்றிதழ்கள்;
(vi) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்;
(vii) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் 02.

வெள்ளசாமி ஸ்ரீகௌரி,
செயலாளர்,
கொட்டகலை பிரதேச சபை,
கொட்டகலை.

பிரதேச சபை அலுவலகம்,
கொட்டகலை,
2018, ஒற்றோபர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கொட்டகலை பிரதேச சபை**

கொட்டகலை பிரதேச சபையின் ........................................................................ பதவி

01. முழுப் பெயர் : ..........................................................................................................

02. அஞ்சல் முகவரி : ......................................................................................................

03. தொலைபேசி இலக்கம் : ...............................................................................................

04. பிறந்த திகதி : ..........................................................................................................

05. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |
(பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

06. விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது : .........................................................................
வருடங்கள் :...................... மாதம்கள் : ................................ நாட்கள்: ...........................................

07. பால் : (ஆண் /பெண்) : ...................................................................................................

08. திருமணமானவரா? திருமணமாகாதவரா?: ...................................................................................

09. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரை மூலமாகவா? பதிவின் மூலமாகவா ? .......................................................

10. நீங்கள் தற்போது சேவை செய்பவராயின்
(i) தற்போது வகிக்கும் பதவி : ........................................................................................
(ii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ...........................................................................
(iii) அப் பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக அடிப்படையிலா?) : .....................................................................
(iv) தேர்தல் தொகுதி : ..................................................................................................
(v) அனுபவம் மற்றும் சேவைக் காலம் : ..............................................................................

11. கல்வித் தகைமைகள் : ..........................
(சித்தி பெற்ற உச்ச தகைமைக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)
க.பொ.த (சா.த.) பரீட்சை சித்தி எய்திய வருடம் : ..................................... சுட்டெண் : ..........................................

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

12. தொழிற்தகைமை : ..........................................................................................................
13. வேறு தகைமைகள் : ......................................................................................................
(தொழில்நுட்ப தகைமைக்கான சான்றிதழின் பிரதியை இணைக்கவும்).

14. நீர் எப்போதாவது அல்லது குற்றச்சாட்டுக்காக நீதி மன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா? :
.........................................................................................................................................................

15. தாங்கள் தற்போது இந்தச் சபையில் சேவையில் உள்ளீர்களா? ஆம் /இல்லை ..........................................................................
ஆம் எனில், தற்போது வகிக்கும் பதவி மற்றும் நியமிக்கப்பட்ட திகதி : .........................................................................................

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் 1-15 வரையான என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள இவ்விபரங்கள் பிழையானது அல்லது பொய்யானதென நியமிக்கப்படுவதற்கு முன் நிரூபிக்கப்பட்டால் நியமனம் பெற தகுதியற்றவராவேன் என்பதையும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

.................................................................

திகதி : ................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி /செல்வி ....................................... இந் நிறுவனத்தில் ............................ ஆக சேவையில் உள்ளார். இந்தப் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை இச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது எனவும் அவர் எவ்வித நீதிமன்ற தண்டனைக்கும் உட்படவில்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

...........................................................................................

திணைக்களத் தலைவரது கையொப்பம்.
(பதவி முத்திரை)

பெயர் : .................................................................................................
பதவி : .................................................................................................
நிறுவனம் : .........................................................................................
திகதி : .................................................................................................

10-368

---

**மில்லனிய பிரதேச சபை**

மில்லனிய பிரதேச சபையில் கீழ்க் காணும் பதவி வெற்றிடங்களுக்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளுடைய உடல் மற்றும் உள ரீதியான தகுதியடைய மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

(நகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவிடமுடைய விண்ணப்பதாரர்களுக்கும் ஏற்கனவே தற்காலிக, அமைய மற்றும் பதிலீடு அடிப்படையில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.)

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 01. | ஆரம்ப தேர்ச்சி அற்ற சேவை வகை சுகாதார தொழிலாளர் தரம் III | 03 | 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் (இங்கு உள்ளூராட்சி நிறுவன மொன்றில் அமைய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்துள்ள சேவைக்காலம், பதவிக்குரியதாக பெற்றுள்ள அனுபவம் பற்றிய வேறு சான்றிதழ்கள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தற்கால நடப்புகள் பற்றிய பொது அறிவு, ஆளுமை பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.) |
| 02. | ஆரம்பத் தேர்ச்சி அற்ற சேவை வகை வேலை/களத் தொழிலாளர் தரம் III | 20 | 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் (இங்கு உள்ளூராட்சி நிறுவன மொன்றில் அமைய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிந்துள்ள சேவைக்காலம், பதவிக்குரியதாக பெற்றுள்ள அனுபவம் பற்றிய வேறு சான்றிதழ்கள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தற்கால நடப்புகள் பற்றிய பொது அறிவு, ஆளுமை பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.) |
| 03. | ஆரம்பத் தேர்ச்சி அற்ற சேவை வகை அலுவலக ஊழியர் சேவையின் காவலாளி தரம் III | 04 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் (ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித்தகைமைகள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தற்கால நடப்புகள் பற்றிய பொது அறிவு, கவனத்தில் கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக பதவிக்குரிய ஆளுமை கவனத்திற் கொள்ளப்படும்.) |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 04. | ஆரம்பத் தேர்ச்சி பெற்ற சேவை வகை சாரதி தரம் III | 04 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் சிங்களம், தமிழ் மொழி உட்பட இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்களில் சித்தி பெற்றி ருத்தல் வேண்டும்.)<br><br>**தொழில்சார் தகைமைகள்**<br>1. தனியார்/கூலி வாகனம் மற்றும் வெற்று வாகன நிறை ஹொண்டர் 24 க்கு குறைந்த ஸ்டேசன் வெக்கன் வண்டி ஓட்டுதல் தொடர்பான மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டை இருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்புச் செய்யும் திகதிக்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் ''சி'' மற்றும் ''சீ 1'' வாகன வகுப்பு அனுமதி அட்டை அல்லது புதிய சாரதி அனுமதி அட்டையின் படி ''பி'' வகுப்பு அனுமதி அட்டை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. பெருந்தெருக்கள் சட்டக் கோவை தொடர்பாக சிறந்த அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>**அனுபவம் :**<br>சாரதி அனுமதி அட்டை பெற்றபின் வாகன சாரதியாக குறைந்த பட்சம் மூன்று (03) வருட அனுபவம் இருத்தல் வேண்டும் (முறையான சான்றிதழ் மூலம் சேவை அனுபவத்தை நிரூபிக்க வேண்டும்.)<br><br>**உடல் தகைமை :**<br>1. குறைந்த பட்சம் உயரம் ஐந்து (05) அடி இருக்க வேண்டும். | ரூ. 25,790 - 10X270- 10X300-10X330- 12X350 - ரூ. 38,990 PL3-2016 | தொழிற்சார் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் (நியமன அதிகாரியினால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று/ பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன போக்குவரத்து பரிசோதகர் ஒருவர், பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் நாத்தப்படுகின்ற தொழிற்சார் பரீட்சை ஒன்றின் மூலம் வாகனம் ஓட்டுதல் தொடர்பான தேர்ச்சி, வீதிச் சட்டம் பற்றிய நடைமுறை அறிவு மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு பரிசோதிக் கப்படும்.) |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| | | | 2. பகல் மற்றும் இரவு காலங்களில் சேவை புரிவதற்கு பொருத்தமான உடல் நலம் கொண்டவராகவும் சிறந்த கண் பார்வை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் அது தொடர்பாக நிரூபிக்க வேண்டும். | | |
| 05. | ஆரம்பத் தேர்ச்சி அற்ற நூலக உதவியாளர் தரம் III | 02 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படும். (இங்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது தேவையான அடிப்படை கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், தற்கால நடப்புகள் பற்றிய பொது அறிவு மற்றும் ஆளுமை கவனத்தில் கொள்ளப்படும்.) |
| 06. | ஆரம்ப பகுதி தேர்ச்சி பெற்ற மின் தொழில் நுட்பவலர் தரம் III | 01 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**தொழில்சார் தகைமைகள் :**<br>1. குறித்த பதவிக்குரித்தான வகையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய தொழில் தகைமை (NVQ) குறைந்த பட்சம் இரண்டாம் மட்டத்திலான தேர்ச்சியொன்று பெற்றிருத்தல் அல்லது குறைந்தபட்சம் குறித்த துறையில் 06 மாதங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல். (சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்.) | ரூ. 25,790 - 10X270-10X300-10X330-12X350 - ரூ. 38,990 PL3-2016 | அடிப்படைத் தகைமைகள் மற்றும் உடல் தகைமைகளை பரிசோதித்தல்.<br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் நடாத்தப்படும் (இங்கு ஆட் சேர்ப்பு செய்யப்படும்போது தேவையான அடிப்படை கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், பதவிக்குரிய நடைமுறை அறிவு மற்றும் ஆளுமை பற்றி கவனத்தில் கொள்ளப்படும். |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| | | | **அனுபவம் :** உரிய உள்ளூராட்சி மன்ற மொன்றில் ஆரம்பத் தரத்தின் பதவி ஒன்றில் சேவை நிரந் தரமாக்கப்பட்டுள்ள சேவைக் காலம் 05 வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மற்றும் உரிய வினைத் திறமை காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெற்றுள்ள 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர் ஒருவராக இருத்தல் வேண்டும். | | |
| 07. | தேர்ச்சி பெற்ற சேவை வகை கனரக இயந்திர செயற்பாட்டாளர் தரம் III | 02 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>**தொழில்சார் தகைமைகள்**<br>(i) கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வெற்று வாகன நிறை ஹொன்டர் 34 க்கு கூடுதலான மோட்டார் வாகனம் மற்றும் கனரக டேலர் மற்றும் பயணிகள் 32 பேர் களை ஏற்றிச் செல்ல அனுமதி யுடைய பஸ்வண்டி ஓட்டு வதற்காக மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப் பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல். அல்லது ''A'' வகுப்பு அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தின் படி ''D'' வகுப்பு அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(ii) குறைந்த பட்சம் உயரம் ஐந்து (05) அடி இருக்க வேண்டும்.<br><br>(iii) பார இயந்திரங்கள் செயற்படுத்துவது தொடர் | ரூ. 25,790 - 10X270-10X300-10X330-12X350 - ரூ. 38,990 PL3-2016 | அடிப்படைத் தகைமைகள் பரிசோதித்தல். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றின் மூலம் செய்யப்படும். (இங்கு வீதிச் சட்டங்கள் பற்றிய அறிவைப் பரிசோதித்தல், இயந்திர செயற்பாடுகள் மற்றும் அதன் இருப்பு பற்றிய அறிவை பரிசோதித்தல். செய்முறைப் பரிசோதனை, ஆளுமை பற்றி கவனம் செலுத்துதல்.) |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| | | | பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக் குழுவினால் வழங்கப் பட்டுள்ள NVQ 04 ஆம் மட்டத்திற்குரிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(iv) மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு இருத்தல் வேண்டும்.<br>**அனுபவம் :**<br>(i) உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் PL1/PL2 பதவியில் நிரந்தரமாக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.<br>(ii) மேலே (i) இல் குறிப்பிடப் படும் பதவி ஒன்றில் 03 வருட சேவைக் காலம் பூர்த்தி செய்யப் பட்டு இருத்தல் வேண்டும்.<br>(iii) பார இயந்திர செயற் பாட்டாளர் பதவிக்காக அந்த இயந்திரத்தை செயற்படுத்து வது சம்பந்தமாக ஒரு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும். | | |
| 08. | முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - பிரிவு 2 சேவை வகை வேலைக்கள மேற் பார்வையாளர் தரம் III | 02 | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாதவாறு குறைந்த பட்சம் மொழி மற்றும் கணிதப் பாடங் களுக்கு திறமைச் சித்திகள் இரண்டு (02) அடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அனுபவம் :**<br>(i) உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் PL1/PL2 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவை நிரந்தர மாக்கப்பட்ட மற்றும் நிரந்தர சேவைக்காலம் 05 வருடங்கள் பூர்த்தி செய்துள்ள ஊழியராக இருத்தல் வேண்டும் என்ப துடன் சேவைக் காலம் பற்றி நிறுவனத்தின் பிரதானி எழுத்து மூலம் உறுதிப் படுத்த வேண்டும். | ரூ. 27,140 - 10X300- 11X350-10X495- 10X660 - ரூ. 45,540 MN1-2016 | ஆட்சேர்ப்பு செய்தல் எழுத்து மூலப் பரீட்சை மூலம் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படும்.<br>01. பொது அறிவு மற்றும் உளச்சார்பு.<br>02. துறைசார்ந்த அறிவை பரிசோதிக்கும் பரீட்சை.<br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் பூர்த்தி செய்யப் பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக் காலம் பதில் கடமை புரிதல் அல்லது கடமை நிறை வேற்றல், துறைசார்ந்த அறிவு பரிசோதிக்கப்படுதல், ஆளுமை கவனத்தில் கொள்ளப்படல். |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 09. | முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - பிரிவு 2 சேவை வகை சுகாதார மேற் பார்வையாளர் தரம் III | 01 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாதவாறு குறைந்த பட்சம் மொழி மற்றும் கணிதப் பாடங் களுக்கு திறமைச் சித்திகள் இரண்டு (02) அடங்கலாக ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்களில் சித்தி பெற்று இருத்தல் வேண்டும்.)<br><br>**அனுபவம் :**<br>(i) உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் PL1/PL2 சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவை நிரந்தர மாக்கப்பட்ட மற்றும் நிரந்தர சேவைக்காலம் 05 வருடங்கள் பூர்த்தி செய்துள்ள ஊழியராக இருத்தல் வேண்டும். என்பதுடன் சேவைக் காலம் பற்றி நிறுவனத்தின் பிரதானி எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும். | ரூ. 27,140 - 10X300-11X350-10X495-10X660 - ரூ. 45,540 MN1-2016 | ஆட்சேர்ப்பு செய்தல் எழுத்து மூல பரீட்சை மூலம் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படும்.<br><br>01. பொது அறிவு மற்றும் உளச்சார்பு.<br>02. துறைசார்ந்த அறிவை பரிசோதிக்கும் பரீட்சை.<br><br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் பூர்த்தி செய்யப் பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக் காலம் பதில் கடமை புரிதல் அல்லது கடமை நிறை வேற்றல், துறைசார்ந்த அறிவு பரிசோதிக்கப்படுதல், ஆளுமை கவனத்தில் கொள்ளப்படல். |
| 10. | ஆரம்ப தேர்ச்சி அற்ற சேவை வகை அலுவலக ஊழியர் சேவை யின் அலுவலக வேலை உதவி யாளர் தரம் III | 03 | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.) | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும். (இங்கு ஆட் சேர்ப்பு செய்யப்படும் போது தேவையான அடிப்படை கல்வித்தகைமைகளுக்கு மேலதி கமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான தற்கால நடப்புகள் பற்றிய பொது அறிவு கவனத்திற் கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக பதவிக் குரிய ஆளுமை கவனத்தில் கொள்ளப்படும்.) |
| 11. | ஆரம்ப தேர்ச்சி அற்ற சேவை வகை தகனபீட செயற்பாட்டாளர் தரம் III | 01 | 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>**அனுபவம் :**<br>02 வருட காலம் சேவை அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் சேவைக் காலம் பற்றி நிறு வனத்தின் பிரதானி எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும். | ரூ. 25,250 - 10X270-10X300-10X330-12X350 - ரூ. 38,450 PL3-2006 | துறைசார்ந்த அறிவை பரிசோதிக்கும் பரீட்சை ஒன்று.<br><br>கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் பூர்த்திசெய்யப் பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக்காலம் பதில் கடமை புரிதல் அல்லது கடமை நிறை வேற்றல், துறைசார்ந்த அறிவு பரிசோதிக்கப்படுதல், ஆளுமை கவனத்தில் கொள்ளப்படல். |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 12. | ஆரம்ப தேர்ச்சி அற்ற சேவை வகை தகனபீட உதவியாளர் தரம் III | 02 | 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | துறைசார்ந்த அறிவை பரிசோதிக்கும் பரீட்சை ஒன்று. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் பூர்த்திசெய்யப் பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக்காலம் பதில் கடமை புரிதல் அல்லது கடமை நிறை வேற்றல், துறைசார்ந்த அறிவு பரிசோதிக்கப்படுதல், ஆளுமை கவனத்தில் கொள்ளப்படல். |
| 13. | முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - முன்பள்ளி ஆசிரியர் தரம் III | 01 | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகள் இரண்டு (02) அடங்கலாக ஆறு பாடங் களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2. க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு (01) பாடம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பொது அறிவு தவிர்ந்த).<br>3. முன்பள்ளி ஆசிரியர்களை பயிற்சியளிக்கும் அரசாங்க நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப் பட்ட) முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் குழந்தைகளின் கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி பற்றிய 06 மாதங்களுக்கு குறையாத பாடநெறி ஒன்றை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 27,140 - 10X300-11X350-10X495-10X660 - ரூ. 45,540 MN1-2016 | **ஆட்சேர்ப்பு செய்தல் :** எழுத்து மூல பரீட்சை மூலம் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவொன்றினால் நடாத்தப்படும்.<br>01. பொது அறிவு மற்றும் உளச்சார்பு.<br>02. துறைசார்ந்த அறிவை பரிசோதிக்கும் பரீட்சை.<br>(கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் பூர்த்தி செய்யப் பட வேண்டிய நிரந்தர சேவைக் காலத்திற்கு மேலதிகமான சேவைக் காலம், பதில் கடமை புரிதல் அல்லது கடமை நிறை வேற்றல், துறைசார்ந்த அறிவு பரிசோதிக்கப்படுதல், ஆளுமை கவனத்தில் கொள்ளப்படல்.) |
| 14. | முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத முன்பள்ளி உதவியாளர் தரம் III | 01 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | ரூ. 24,250 - 10X250-10X270-10X300-12X330 - ரூ. 36,410 PL1-2016 | 1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.<br>2. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 03 வருட காலம் தொடர்ச்சியாக விண்ணப்பதாரி மேல் |

| தொடர் இல. | சேவை வகுதி மற்றும் பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் மற்றும் குறியீட்டு இல. | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (ஒரு தடவையில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.) | | மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.<br>3. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.<br>4. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென விண்ணப்பம் கோரப்படும் அறிவித் தலில்/வர்த்தமானி அறிவித் தலில் குறிப் பிடப்படும் திகதிக்கு அந்த தகைமைகள் சகல வகையிலும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும். |

**02. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 3 வருடங்கள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.

(iii) மில்லனிய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவிடமுடையவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவியில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை உரித்தாகாது.)

(v) மில்லனிய பிரதேச சபையில் ஏற்கனவே அமய, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில் சேவை புரியும் ஊழியர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும்.

(vi) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தையுடையவராகவும் பதவியில் கடமையாற்ற போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவராக இருத்தலாகாது.

(viii) அரசாங்கத்தினால் அல்லது உள்ளூராட்சி மன்றத்தினால் சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தலாகாது.

(ix) அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தலாகாது.

(x) சேவையின் தேவைக்கமைய முறையான நேர்முகப்பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதுடன் அதில் பெறுகின்ற அதிகூடிய புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(xi) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான சகல குறைந்த பட்ச தகைமைகளும் வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(xii) தொடர் இலக்கம் 6 தொடக்கம் 09 வரையின் கீழ் தரப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்காக வரையறுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுள் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(xiii) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் வேளையில் மேல் மாகாணத்தின் இந்த பதவிகளுக்குரிய புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தியமைக்கப்படுதல் மற்றும் பதிலீடு செய்யப்படுதல், ஆட்சேர்ப்பு செய்தல், தாமதப்படுத்தல், மாற்றியமைத்தல் மற்றும் இவ்வறிவித்தலை இரத்து செய்தல் அல்லது திருத்தியமைத்தல் ஆகிய அதிகாரங்கள் மில்லனிய பிரதேச சபைக்கு உரித்தானது.

*3. சேவையில் அமர்த்தலுக்கான நிபந்தனைகள் :*

1. இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதாகம். (ஓய்வூதியச் சம்பளம் தொடர்பாக வருங்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டு நியமனம் வழங்கப்படும்.)
2. ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஊழியர்கள் 03 வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்படுத்தப்படுவார்கள்.
3. அரசகரும மொழிகள் கொள்கைக்கு இணங்க வேண்டும்.
4. பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டங்கள் 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் செலுத்தப்படுவது அரச நிருவாக சுற்றறிக்கை 3/2016 இன் II ஆவது உப அட்டவணைக்கு அமையவாகும். அந்த சம்பள அளவுத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது 2020.0101 ஆந் திகதியில் இருந்து ஆகும்.
6. இதற்கு மேலதிகமாக தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக் குறிப்பு, மேல் மாகாண கௌரவ ஆளுநரின் கட்டளைகளுக்கும், மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் விடுக்கப்படுகின்ற வேறு கட்டளைகளுக்கும் திணைக்கள கட்டளைகளுக்கும் மில்லனிய பிரதேச சபையினால் காலத்துக்க காலம் விடுக்கப்படுகின்ற ஒழுங்கு விதி முறைகள் கட்டளைகளுக்கும் ஏற்புடையவாறு செயற்படுவதற்கும் நியமனதாரர் உடன்பட வேண்டும்.

*4. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை:*

விண்ணப்பதாரியின் சுய தரவுகள் (Bio Data) உள்ளடங்கும் வகையில் A4 அளவிலான விண்ணப்பப்படிவம் ஒன்றை தயாரித்து விண்ணப்பம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2018.10.25 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மில்லனிய பிரதேச சபை, மில்லனிய" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் கடமை புரிகின்ற விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை நிறுவனத்தின் பிரதானி ஊடாக அனுப்பப்படல் வேண்டும். பூர்த்தியற்ற மற்றும் உரிய தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் நிழற் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்:

(i) பிறப்புச்சான்றிதழ்;
(ii) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்பிரதி ஒன்று;
(iii) கல்விச் சான்றிதல்கள்/பாடசாலையை விட்டு விலகிய சான்றிதழ்;
(iv) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பம் அடங்களான கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் ;
(v) ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்;
(vi) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்;
(vii) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு ;
(viii) பொலிஸ் அறிக்கை.

05. வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நேர்முகப் பரீட்சைக்கு/செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் அந்த அழைப்பு கிடைப்பதன் மூலம் நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகதி பெற்றுள்ளீர்கள் என்று கருதலாகாது. இந்த ஆட்சேர்ப்பு சம்பந்தமாக ஏற்பாடுகள் இல்லாத விடயங்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மில்லனிய பிரதேச சபையின் செயலாளருக்கு உரித்தானது.

மேலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளினால் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருந்தாமை ஏற்படுமானால், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது என கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

சுனீதா அபேசிங்க,
செயலாளர்,
மில்லனிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மில்லனிய.
2018.09.28

10-357

## நவகத்தேகம பிரதேச சபை

நவகத்தேகம பிரதேச சபையில் பதவி வெற்றிடங்கள்

நவகத்தேகம பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்கு தகுதியுள்ளவர்களை சேர்த்துக் கொள்வதற்காக நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடத்தில் இருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | மின்சராரம் பழுதுபார்க்கும் தொழிலாளி | 01 | PL3 - 2016<br>ரூ. 25,790 - 10X270 - 10X300 - 10X330 - 12X350 - ரூ. 38,990 | **வெளி விண்ணப்பதாரிகளுக்காக :**<br>க. பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்களுக்கு மேற்படாது இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 06 பாடங்களாவது சித்தியடைந் திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) குறைந்த பட்சம் ஒரே அமர்வில் 05 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக :**<br>தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல். (தற்போது அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்துக் கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப் பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.)<br><br>**தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் :**<br>1. பதவியின் செயற்பாடுகளுக்கமைய தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்கின்ற தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத் தினால் வழங்கப்படுகின்ற N.V.Q.4 தரத்தில் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>மற்றும்<br><br>2. ஏற்றுக் கொள்ளப்படும் நிறுவனம் ஒன்றினால் உரிய துறையில் 03 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) |
| 02. | சாரதி | 01 | PL3 - 2016<br>ரூ. 25,790 - 10X270 - 10X300 - 10X330 - 12X350 - ரூ. 38,990 | **வெளி விண்ணப்பதாரிகளுக்காக :**<br>(அ) க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு தடவை களுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு பாடங் களுக்கு திறமைச் சித்தியுடன் 06 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) குறைந்த பட்சம் ஒரே தடவையில் 05 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | **உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக :** (தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 08 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல். (தற்போது அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்துக் கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச் சந்தர்ப் பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்). |
| | | | | **தொழில்நுட்ப அறிவு / திறமை மற்றும் அனுபவம் :** பொதியில்லாத எடை ஹொன்டர் 34 இற்கு மேற்பட்ட மோட்டார் முற்பகுதியும் பார ரோலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக் கூடிய பஸ் வண்டியை செலுத்தவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (A வகுப்பு சாரதி உரிமப் பத்திரம்) |
| | | | | மற்றும் |
| | | | | வாகன சாரதியாக 03 ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்). |

**02. தேவையான வேறு தகைமைகள் :-**

(i) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது மாகாண சபை அரச சேவையில் நிரந்தரப் பதவியில் கடமை புரியும் விண்ணப்பதாரிகளுக்கும், இப் பிரதேச சபையில் அமய/தற்காலிக /ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவையார்களுக்கும் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

(ii) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவு அடிப்படையில் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரி நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். (தமது கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழினை பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

(iv) நல்லோழுக்கமும் தேகாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(v) தண்டனை சட்டக் கோவைப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

(vi) மாகாண அரச சேவையில் அமய/தற்காலிக /ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணி புரிகின்ற உத்தியோகத்தர்களுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு தொடர்ந்து 5 ஆண்டு காலத்தினுள் குற்றங்களுக்கு ( எச்சரிக்கைகள் தவிர) தண்டனைப் பெறாததும் இக் காலத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் உரிய திகதிக்கு பெற்றிருத்தல் மற்றும் மகிழ்ச்சிகரமான சேவை காலம் இருத்தல் வேண்டும்.

(vii) விண்ணப்பதாரிகள் அந்தந்த பதவிகளுக்கு முன்னிலையில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

**03. சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனைகள் :-**

1. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும்.
2. விதவைகள் /தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்கேற்க வேண்டும்.
3. பதவி 03 ஆண்டு நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டதாகும்.
4. இவ் ஆட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை சட்டத்திற்கும் நிதி சட்டத்திற்கும் திணைக்கள கட்டளைகளுக்கும் அரச அல்லது மாகாண சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு எல்லா பணியாளர்களும் உட்படுதல் வேண்டும்.

**04. ஆட்சேர்ப்பு முறை**

1. தேவைக்கேற்ப எழுத்து மூலம் / கட்டமைக்கப்பட்ட அல்லது நேர்முகப் பரீட்சையினால் தகுதியுடையவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.
2. விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களை உறுதிப்படுத்தி பிரதிகளை இணைத்து அனுப்பப்பட வேண்டியதுடன் முதல் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்கப்பட வேண்டும்.
   (அ) பிறப்புச் சான்றிதழ்;
   (ஆ) கல்விச் சான்றிதழ்;
3. தமது குடியிருப்பினை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச செயலாளர் உறுதிப்படுத்த வேண்டும்.
4. அண்மையில் பெற்றுக் கொண்ட நல்லொழுக்கச் சான்றிதழ் 02 (இரு சான்றிதழ் கிராம அலுவலரினால் பெற்றுக் கொண்ட சான்றிதழாக வேண்டும்).
5. தொழில் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ஒருந்தால் அச் சான்றிதழ்கள்.
6. சாரதிகளை சேர்த்துக் கொள்ளும் போது உள்ளூராட்சி திணைக்களத்தின் ஒரு பிரதிநிதி, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் போக்குவரத்து பதிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்து பிரிவில் ஒரு உத்தியோகத்தர்களை உடைய ஒரு குழுவினால் நடாத்தப்படுகின்ற வாகனத்தினை ஓட்டுவதற்கான திறமையினை அளப்பதற்கான பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
7. ஆரம்ப தகைமைகளை வழங்கியுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.
8. விண்ணப்பதாரிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவங்களை 2018.11.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், பிரதேச சபை, நவகத்தேகம" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

   விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியினை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இவ்வாள் சேர்ப்பினை காலதாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பவற்றிற்கான பூரண அதிகாரம் நவகத்தேகம பிரதேச சபை செயலாளருக்குரித்தானதாகும்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
நவகத்தேகம பிரதேச சபை.

நவகத்தேகம பிரதேச சபை அலுவலகம்,
2018, செத்தெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நவகத்தேகம பிரதேச சபை**

........................................... பதவிக்கான விண்ணப்பப் படிவம்

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................
(ii) முதலெழுத்துக்களினால் குறிக்கும் பெயர் : ..........................................................................................

02. தபால் முகவரி : ..........................................................................................................................

03. பிறந்த திகதி : ஆண்டு : ....................................... மாதம் : ...................................... திகதி : ....................................

04. விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் திகதிக்கு வயது :
வருடங்கள் : ............................ மாதங்கள் : ................................. நாட்கள் : .....................................

05. தேசிய ஆளடையாளட்டையின் இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

06. பால் (ஆண் /பெண்) : ..............................................................................................................

07. திருமணமானவர் /திருமணமாகாதவர் : ...............................................................................................

08. இனம் : .................................................................................................................................

09. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின், பரம்பரையாகவா? இல்லையாயின், பதிவு செய்யப்பட்டதினாலா என்பது பற்றி : ....................................................

10. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) : .......................................................

11. நீங்கள் தற்போது அரச சேவையில் உள்ளீரா? அவ்வாறாயின் பதவி, சேவை நிலையம் மற்றும் அப் பதவியின் தன்மை நிரந்தர /அமய/ தற்காலிக : ..............................................................................................................

12. அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள் : ..........................................................................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்று உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்க முடியும் எனக்குத் தெரியும்.

திகதி : .........................................                    ...................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் நிறுவாகத் தலைவரின் சான்றிதழ் :**

(தற்போது அரச சேவையில் /மாகாண அரச சேவையில் நிரந்தர /அமய /தற்காலிக உடன்படிக்கை அடிப்படையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரிகளுக்காக).

இவ் விண்ணப்பப்பத்திரத்தினை சமர்பிக்கின்ற திரு./திருமதி /செல்வி .................................... என்பவர்................................ ஆந் திகதி தொடக்கம் ..........................................வரை .............................. இவ் அலுவலகத்தில் நிரந்தர/அமய/தற்காலிக உடன்படிக்கை அடிப்படையில் பணிபுரிகின்றார் என்றும், அவரின் வேலை, வருகை மற்றும் நடத்தை மகிழ்ச்சிகரமானது என்றும் மேலே குறிப்பிடப்பட்ட 01 தொடக்கம்த 08 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா தகவல்களும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின்

*படி நான் தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் என்றும், அவை சரியானது என்றும் 2018 ................................. ஆம் மாதம் .......................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று இத்துடன் சான்று பகர்கின்றேன்.*

.........................................................................,
*திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*

*உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..................................................*
*பதவி : ............................*
*முகவரி : ..........................................*
*திகதி : .........................................*

*10 - 432*

---

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கொத்மலை பிரதேச சபை

*1952ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதி) சட்டம்*

*1952ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (3) ஆவது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நடைபெற்ற கொத்மலை பிரதேச சபையின் சபைக் கூட்டத்தின் மூலம் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.*

*சுசந்த பிரதீப் குமார ஜயசுந்தர,*
*தலைவர்,*
*கொத்மலை பிரதேச சபை.*

*கொத்மலை பிரதேச சபை அலுவலகம்,*
*பூண்டுலோயா,*
*2018, செத்தெம்பர் 18.*

### 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (சம்மதிக்கப்பட்ட துணை விதி) சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (கட்டளைச் சட்டம்) சட்டத்தின் பிரிவு 02 இன் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியில் கூறப்பட்டுள்ள 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடய பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மத்திய மாகாண உள்ளூராட்சி விடய பொறுப்பு அமைச்சரால் குறிப்பிடப்பட்டுள்ள 2016.02.23 ஆந் திகதிய 1955/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் படி, மத்திய மாகாணத்தின் மாகாண சபை மூலம் 2017.02.21 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட 2017.05.05 ஆந் திகதிய 2017/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் IV (அ) பிரிவில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் படி, கீழ் வரும் துணை விதிகளை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடும் திகதியில் இருந்து ஏற்றுக் கொண்டு கொத்மலை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட 261 ஆவது அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவன (அனுமதி பெற்ற துணை விதி) 6 ஆவது சட்டத்தின் (3) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.*

1. பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டிடங்கள்அமைப்பதற்கான அமைப்பு பரிசீலனை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான துணை விதி (நகர அபிவிருத்தி அதிகார சபை எல்லைக்கு வெளியில்)
2. சேவைகளுக்கான கட்டணம் அறவிடுவது சம்பந்தமான துணை விதி
3 பொது நூலகம் சம்பந்தமான துணை விதி
4. தகனம் செய்யுமிடம் சம்பந்தமான துணை விதி
5. வரி அறவிடல் செயற்பாட்டிற்காக கால அறிக்கை மற்றும் தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கான துணை விதி
6. அழுத்தமான வியாபாரம் மற்றும் அபாயகரமான வியாபாரம் சம்பந்தமான துணை விதி.
7. மீன் விற்பனை சம்பந்தமான துணை விதி
8. பிரதேச சபை சந்தை சம்பந்தமான துணை விதி
9. அலங்கார மேம்பாடு சம்பந்தமான துணை விதி
10. பொது மலசலக் கூட பாவனை முறைமைப்படுத்துதல் சம்பந்தமான துணை விதி
11. பிரச்சார அறிவுப்புக்கள் சம்பந்தமான துணை விதி
12. விலங்குப் பண்ணைகள் கட்டுப்பாடு மற்றும் முறைமைப்படுத்துதல் சம்பந்தமான துணை விதி
13. இறைச்சி விற்பனை சம்பந்தமான துணை விதி
14. தனியார் கல்வி நிலையங்கள் சம்பந்தமான துணை விதி
15. மாடு வெட்டுமிடம் சம்பந்தமான துணை விதி
16. பிரதேச சபைத் தெருக்களில் செல்லும் வாகனங்களது பாரம் மற்றும் வேக கட்டுப்பாடு சம்பந்தமான துணை விதி.

10 – 356

---

**மத்துகம பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின்
பிரகாரம் செய்யப்படும் அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண களுத்துறை மாவட்டத்தில் மத்துகம பிரதேச சபையின் 1022 ஆம் இலக்க 2018.06.08 ஆந் திகதிய வர்த்தமானியின் IV(ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பின்வரும் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் இக்கால எல்லைக்குள் எவ்வித எதிர்ப்பும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதனால் மத்துகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என பிரகடனப்படுத்துவதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றன.

மெரில் முணசிங்க,
தலைவர்,
மத்துகம பிரதேச சபை.

பிரதேச சபை பிரதான அலுவலகம்,
மத்துகம,
2018, செத்தெம்பர் 27.

**அட்டவணை**

| தொ. இல. | பாதையின் பெயர் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கப்படும் இடம் | முடிவடையும் இடம் | கி. அலுவலர் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | மடவல தித்தகெக்கிரிஹேன வீதி | 1000 | 3.65 | வெலிபென்ன ஊருகொட பாதையில் பல்லே முல்ல | கல்கடுவ-ஊருகொட பாதை | 793 டி மடலவ |
| 2. | இத்தகொட மாஸ்லியத்த வீதி | 111 | 3.65 | குருதொல வீதி | திருமதி குசுமா ஜயலத் அவர்களின் காணி | 806 பி ஹிரிகெடிய |
| 3. | சென்றல் கார்டின் பிரதான மாவத்தை | 700 | 6.0 | ஆந்தகல வீதி | திரு. எச்.ஏ.சீ.டீ.ஏ. செனவிரத்ன அவர்களின் காணி | 805 மத்துகம கிழக்கு |
| 4. | சென்றல் கார்டின் 1 ஆவது மாவத்தை | 52 | 3.0 | சென்றல் கார்டின் பிரதான மாவத்தை | திரு. ஜீ. டீ. பத்மசிரி அவர்களின் காணி | 805 மத்துகம கிழக்கு |
| 5. | சென்றல் கார்டின் 2 ஆவது மாவத்தை | 43 | 3.0 | சென்றல் கார்டின் பிரதான மாவத்தை | திரு. பி.டீ.பத்மசிரி அவர்களின் காணி | 805 மத்துகம கிழக்கு |
| 6. | சென்றல் கார்டின் 3 ஆவது மாவத்தை | 61 | 4.57 | சென்றல் கார்டின் பிரதான மாவத்தை | திருமதி ரமணி கலுஆரச்சி அவர்களின் காணி | 805 மத்துகம கிழக்கு |
| 7. | தோனமுல்ல வீதி | 234 | 3.6 | மத்துகம களுத்துறை பிரதான பாதையில் கடவக்க பிரதேசத்தில் இருந்து இடது பக்கம் | திரு. டீ. எச்.ஜானக்க அவர்களின் காணி | 805 ஏ வெலி மானான |
| 8. | கொடஹேன்கந்த வீதி | 254 | 3.6 | சுதன்கெதர ஹேவாகொட வீதி | திரு. டபிள்யூ. ஜீ. அஜித் பிரசன்ன அவர்களின் காணி | 795 ஒவிடிகல |
| 9. | கட்டுகஹஹேன ஜயவர்தன கொட முதலாவது துணை வீதி | 147 | 3 | கட்டுகஹஹேன சந்தியில் இருந்து கொடகெதர வரை | திருமதி வில்டின் நோனா அவர்களின் காணி | 798 கொடகெதர |
| 10. | ஓவிட்டிகல கட்டடிகொடெல்ல பாதை | 77 | 6 | மத்துகம அலுத்கம பாதையில் கடித்த மங்கட பாலம் | கடித்த மங்கட ஆறு மற்றும் வயல் | 795 ஓவிட்டிகல |
| 11. | நடுத்துடுவ தெல்கஸ்கொட | 900 | 4.5 | நடுத்துடுவ அலுத்கம பாதையில் நடுத்துடுவ சந்தியில் இருந்து கீரன்திடிய பக்கமாக காணப்படும் முதலாவது பாலத்திற்கு அருகில் வலது பக்கமாக | ஜ. பீ. பந்துல பிரேமசிரி அவர்களின் காணி | 796 ஏ அலுத்கமெகொட |
| 12. | கடலிகம கந்த வீதி முதலாவது துணை பாதை | 442 | 3.65 | குடலிகம கந்த வீதி | இத்தகொடதெனிய 1 ஆவது ஒழுங்கை | 806 இத்தகொட கிழக்கு |
| 13. | அலுபொகஹலந்த பாதை | 154 | 6 | மத்துகம அகலவத்த பிரதான வீதி | திரு. ஜீ.வீ.சிரிவிமல் அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |
| 14. | அலுபொகஹலந்த முதலாவது குறுக்கு பாதை | 80 | 3.6 | திருமதி எஸ்.ஏ. சாந்தனி வினிதா அவர்களின் காணி | திருமதி டபிள்யூ.ஏ.புஸ்பா அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |
| 15. | அலுபொகஹலந்த இரண்டாவது குறுக்குப் பாதை | 64 | 3 | திருமதி டபிள்யூ. ஏ. புஸ்பா அவர்களின் காணி | திரு.ஜீ. வீ. சிரிவிமல் அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| தொ. இல. | பாதையின் பெயர் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கப்படும் இடம் | முடிவடையும் இடம் | கி. அலுவலர் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| 16. | சாமகந்த ஊடாக பெத்த கந்தவிற்கு செல்லும் பாதை | 246 | 3 | தேவாலகந்த பாதை | திருமதி ஜீ.டீ.மாலனி அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |
| 17. | நிவிதிகல வத்த வீதி முதலாவது ஒழுங்கை | 75 | 3 | நிவிதிகல வத்த வீதி | திருமதி ஐ. எச்.யமுனா உதயங்கனி அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |
| 18. | அட்டிகுக்குலுகொடெல்ல முதலாவது ஒழுங்கை | 155 | 4.9 | மாவத்தகொட வீதி | திரு.டபிள்யு.ரி.டீ.நந்தன விக்கிரமசிங்க அவர்களின் காணி | 794சி ஹொரவல மேற்கு |
| 19. | பிலிங்கஹவத்த முதலாவது ஒழுங்கை | 185 | 3.04 | பாந்திய சாரானந்த மாவத்தையில் சம்பத் பூட் சிட்டிக்கு அருகில் | திரு. கே.எம்.எஸ். காமினி அவர்களின் காணி | 805 ஈ யட்டோவிட |
| 20. | மத்துகம விலேகெர் சர்ச் வீதி | 641 | 3.04 | விலேகொட வீதி திரு. டபிள்யூ. டீ. மைத்திரிபால அவர்களின் வீட்டிற்கு அருகில் | விலேகொட சர்ச் இற்கு அருகில் | 805 ஈ யட்டோவிட |
| 21 | சாமகந்த வீதி இரண்டாவது குறுக்கு பாதை | 90 | 3.04 | மத்துகம சாமகந்தை வீதி | திரு. ஜயந்த லியனாரச்சி அவர்களின் காணி | 805 பி மத்துகம வடக்கு |
| 22. | ஹிங்குரான போபிட்டியவ வத்த வீதி | 242 | 12 அடி | மத்துகம களுத்துறை பிரதான வீதி | திரு. ரொஷான் சமிந்த அவர்களின் காணி | 804 ஏ வெலிமானான |
| 23. | கிரிபேலதுடுவ வீதி | 220 | 3 | யுடதொல அலுத்கம பிரதான வீதி | திரு. டபிள்யு.டீ. தர்மதாச அவர்களின் காணி | 797 ஏ புஸசலமுல்ல |
| 24. | பக்கினிகஹலந்த வீதி | 75 | 2.74 | மத்துகம அகலவத்த பிரதான வீதி | திரு. மாதுபால ஹெட்டியாரச்சி அவர்களின் காணி | 805 டி வெத்தேவ |
| 25. | அக்கொனாயா வத்த வீதி | 125 | 4.87 | செந்தநாயக்க மாவத்தை | திரு. கே. ரஞ்சித் அவர்களின் காணி | 805 பி மத்துகம மேற்கு |
| 26. | அத்துலத்முதலிகம சமகி மாவத்தை | 57 | 3 | ஆந்தகல வீதி | திரு. கே.டி.மஞ்சுல கிரிஷாந்த அவர்களின் காணி | 805 டி மத்துகம கிழக்கு |
| 27 | அத்துலத்முலிகம எஸ்.ஏ. வெல்கம மாவத்தை. | 114 | 2.43 | ஆந்தகல வீதி | திரு. பீ.தம்மிக்க பிரியதர்சன அவர்களின் காணி | 805 டி மத்துகம கிழக்கு |
| 28 | அத்துலத்முலிகம எஸ்.ஏ. வெல்கம 1 ஆவது மாவத்தை | | | ஆந்தகல வீதி | திருமதி டபிள்யு. எல். சுமனா வத்தி அவர்களின் காணி | 805 டி மத்துகம கிழக்கு |
| 29 | பதுகம 7 ஆவது மாவத்தையில் 3 ஆவது ஒழுங்கை | 65.5 | 3.65 | புதகம 7 ஆவது மாவத்தை | திருமதி. டி.ஆர்.ரி.லொக்குகெட கொட அவர்களின் காணி | 795 ஏ பதுகம |
| 30 | மழைய வைத்தியாசாலை ஒழுங்கை | 100 | 3.65 | பண்டாரநாயக்க மாவத்தை | திரு.பீ.வீ.விஜயதாச அவர்களின் காணி | 805 மத்துகம கிழக்கு |
| 31 | ஹொரவல சமகி மாவத்தை | 300 | 3 | அலுத்கம மத்துகம பிரதான வீதி | திரு.ஹேமந்த புஸ்பகுமார அவர்களின் காணி | 794 சீ ஹொரவல மேற்கு |
| 32 | தெபரபேதிஹேனவிற்கு உட்பிரவேசிக்கும் துணை வீதி | 135 | 3 | போபிட்டிய சோமபால மாவத்தை | திருமதி கே. டீ. சீ. மல்லிகா ஜயதிலக்க அவர்களின் காணி | 802 போபிட்டிய கிழக்கு |

## அட்டவணை (தொடர்ச்சி)

| தொ. இல. | பாதையின் பெயர் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கப்படும் இடம் | முடிவடையும் இடம் | கி. அலுவலர் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| 33 | தும்பராவத்த வீதி | 130 | 2.13 | வெல்லத்த வீதி | திருமதி. முல்லிகா இந்துனில் அவர்களின் காணி | 804 பாந்திய |
| 34 | குருபுரய 1 வது மாவத்தை | 200 | 6.09 | ஆந்தகல வீதி | திரு.கசுன் எதிரிசிங்க அவர்களின் காணி | 804 பாந்திய |
| 35 | ரத்னாயக்க வத்த வீதி | 140 | 3.65 | வெல்லகந்தல வீதி பிரதான வீதி | திரு.டபிள்யூ. ஏ. சமன் உதயதிலக்க அவர்களின் காணி | 804 பாந்திய |
| 36 | மத்தேகெதர வத்த ஸ்டோருவ வீதி | 368 | 3.65 | மத்தேகெதர வத்த வீதி | திரு.டபிள்யூ. ஏ.கீர்த்தி வீரசிங்க அவர்களின் காணி | 805 சீ மத்துகம தெற்கு |
| 37 | மத்தேகெதர வத்த ஸ்டோருவ வீதி 1 ஆவது ஒழுங்கை | 100 | 3.65 | மத்தேகெதர வத்த ஸ்டோரவ வீதி | திரு.கே.ஏ.ரசிக லசந்த அவர்களின் காணி | 805 சீ மத்துகம தெற்கு |
| 38 | அம்பேமுல்ல பாதை | 395 | 3 | அம்பேமுல்ல பாதையில் அகலவத்த பிரதேச சபை எல்லை | ஹேலம அரசாங்க தோட்டம் | 805 டீ வெத்தெவ |
| 39 | ஹொரகந்முல்ல முணசிங்க மாவத்தை | 233 | 5 | ஹொரகந்தமல்ல வீதி | திரு. ஆர்.பி.டி.டி.எம்.ரணவீர அவர்களின் காணி | 805 பி மத்துகம வேடக்கு |
| 40 | கஹடகஹவத்த பாதை | 765 | 3.65 | ஹிஜ்ரா மாவத்தை | வெலிபென்ன பாடசாலை வீதி | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு/ 793 வெலிபென்ன மேற்கு |
| 41 | கஹடகஹவத்த முதலாவது துணைப் பாதை | 183 | 4.57 | கஹடகஹவத்த பாதை | கஹடகஹவத்த பாதை | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு |
| 42 | கஹடகஹவத்த இரண்டாவது துணைப் பாதை | 380 | 6 | கஹடகஹவத்த பாதை | கஹடகஹவத்த ஏல விற்பனை காணி | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு |
| 43 | கஹடகஹவத்த இரண்டாவது துணைப் பாதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் முதலாவது துணை பாதை | 225 | 6 | கஹடகஹவத்த பாதையில் இரண்டாவது துணைப் பாதை | கஹடகஹவத்த பாதையில் இரண்டாவது துணைப் பாதை | 793 பி வெலிபென்ன கேிழக்கு வடக்கு |
| 44 | கஹடகஹவத்த இரண்டாவது துணைப் பாதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் மூன்றாவது துணை பாதை | 105 | 6 | கஹடகஹவத்த பாதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் இரண்டாவது துணை பாதையில் முதலாவது துணை பாதை | கஹடகஹவத்த பாதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் இரண்டாவது துணை பாதையில் முதலாவது துணை பாதை | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு |
| 45 | கஹடகஹவத்த இரண்டாவது துணைப் பதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் இரண்டாவது துணை பாதை | 69 | 4.57 | கஹடகஹவத்த பாதையில் இரண்டாவது துணை பாதை | இரண்டாவது துணை பாதையில் ஆரம்பிக்கப்படும் முதலாவது துணை பாதை | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு |
| 46 | கஹடகஹவத்த பதையில் இருந்து ஆரம்பிக்கப்படும் மூன்றாவது துணை பாதை | 100 | 4.57 | கஹடகஹவத்த பாதை | வயல் வெளி | 793 பி வெலிபென்ன கிழக்கு வடக்கு |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| தொ. இல. | பாதையின் பெயர் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கப்படும் இடம் | முடிவடையும் இடம் | கி. அலுவலர் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| 47 | வெல்கந்தல உடுமுல்ல வீதி | 346 | 3.65 | வெலகந்த வீதி | திருமதி ஐ. எச். இரேஷா அவர்களின் காணி | 804 பாந்திய |
| 48 | குருதொல வெந்தேசிவத்த வீதி | 139 | 4.5 | குருதொல வீதி | திரு.கருணாதாச விக்கிரமநாயக்க அவர்களின் காணி | 806 சி குருதொல |
| 49 | நுககஹகுருந்துவத்த வீதி | 115 | 3 | களுத்துறை- மத்துகம பிரதான வீதி | திரு.டபிள்யூ. கே. விஜேசேன அவர்களின் காணி | 805 ஏ மத்துகம மேற்கு |
| 50 | வடக்கு பல்லியகொட மஸ்ஸலயாவத்த வீதி | 90 | 3 | பாந்திய செந்தநாயக்க மாவத்தையில் திரு. கொலித்த செந்தநாயக்க அவர்களின் காணி | திரு.கே.ஏ.ரஞ்ஜித் அவர்களின் காணி | 805 ஏ மத்துகம மேற்கு |
| 51 | ஹொரவல அம்பலந்துவத்த வீதி | 130 | 6 | ஹொரவல அலுத்கம வீதி RDA அலுவலகம் | திரு.சகன் காரியவசம் அவர்களின் காணி | 794 ஹொரவல |
| 52 | திரு. டீ.ஆர்.சமித் வீரசிங்க அவர்களின் வீட்டில் இருந்து வைத்தியர் நாலக்க ஜயசிங்க அவர்களின் வீடு வரை வீதி (பக்மீகஹலந்த வீதி) | 175 | 4.57 | திரு. டி.ஆர்.சமித் வீரசிங்க அவர்களின் காணி | வைத்தியர் நாலக்க ஜயசிங்க அவர்களின் காணி | 805 டி வேத்தேவ |
| 53 | பாந்திய தர்மராஜ மாவத்தையில் முதலாவது துணை வீதி | 100 | 4.5 | தர்மராஜ மாவத்தை | திரு.ஏ.ரி.ரத்னபால அவர்களின் காணி | 805 ஏ மத்துகம மேற்கு |

10- 374

---

**மத்துகம பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்படும் அறிவித்தல்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் 24 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச சபையினால் கீழே குறிப்பிடப்படும் பாதைகள் மத்துகம பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளாக பிரகடனப்படுத்தப்படுகின்றது என இதில் அறிவிக்கப்படுகின்றது.*

*02. இந்த பாதைகள் சம்பந்தமாக உரிய காணி உரிமையாளர்கள் என உரிமைகோரும் தரப்பினர்களினால் ஏதேனும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படும் பட்சத்தில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினம் தொடக்கம் ஒரு மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்காக 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மெரில் முணசிங்க,
தலைவர்,
மத்துகம பிரதேச சபை.

பிரதேச சபை பிரதான அலுவலகம்,
மத்துகம ,
2018, செத்தெம்பர் 27.

**அட்டவணை**

| தொடர் இல. | பாதையின் பெயர் | பாதையின் நீளம் மீற்றர் | பாதையின் அகலம் மீற்றர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவடையும் இடம் | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|---|---|---|---|---|
| 01 | யட்டோவிட்ட திமுது மிஹிர மாவத்தை | 90 | 3 | மத்துகம யட்டோவிட பாதை | பிளிங்கஹவத்த கெடகெரெல்ல மாவத்தை | 805 ஏ, யட்டோவிட்ட |
| 02 | பொந்துபிட்டிய மெஸ்ஸ பெந்தி ஹேனவீதி | 1700 | 4.5 | அளுத்கம மத்துகம பிரதான பாதை | பொந்துபிட்டிய மெஸ்ஸ பெந்திஹேன | 771 பீ, பொந்து பிட்டி |
| 03 | ஆந்தாவல மஹவத்த பாதை | 250 | 3 | ரிட்டிகெட்டிய மீரிகம பாதை | எம். ஏ. பிரதீப் வசந்த அவர்களின் காணி | 776, ஆந்தாவல |
| 04 | பக்மீகஹலந்த பாதை | 175 | 4.57 | மத்துகம அகலவத்த பிரதான வீதி | வைத்தியர் நாளக ஜயசிங்க அவர்களின் காணி | 805 டீ, வேத்தேவ |

10 - 375

---

# துணைவிதிகள்

**காத்தான்குடி நகர சபை**

*திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான துணை விதிகள்*

*இதனகத்துப் பின்னர் "நகர சபை" என அடையாளப்படுத்தப்படும் காத்தான்குடி நகர சபை எல்லைக்குள் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகள், பாதைகளில் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை பிரித்து அகற்றுதல், களஞ்சியப்படுத்தல், சேகரித்தல், ஏற்றி இறக்குதல், பரிகரித்தல், பதப்படுத்தல், அழித்தலுக்கான காரணங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்துதல் மற்றும் சேவைக் கட்டணம் அறவிடுதற்கான ஒரு துணை விதி.*

*நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (225 ஆவது அத்தியாயம்) 157 மற்றும் 118 ஆவது பிரிவு (IX) ஆவது உபபிரிவு (ஆ) மற்றும் (இ) உப பந்திகளின் ஏற்பாடுகளுடன் பிரிவு 153 ஐ சேர்த்து வாசிப்பதற்கு அமைவாக காத்தான்குடி நகர சபையினால் தயாரிக்கப்பட்ட இத்துணைவிதி குறித்து நகர சபையின் 28.06.2018 ஆந் திகதிய கூட்டத்தில் 2018/98 ஆம் இலக்க தீர்மானத்தினால் நிறைவேற்றப்பட்டது.*

எஸ். எச். எம். அஸ்பர்,
தவிசாளர்,
நகரசபை,
காத்தான்குடி.

நகர சபை அலுவலகம்,
காத்தான்குடி,
2018, யூன் 29.

**பொதுவானவை**

1. இத்துணை விதிகள் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. இத்துணைவிதி நகர சபை எல்லைக்குள் வரும் பொது இடங்கள், தனிப்பட்ட வளாகங்கள், வீதிகள் மற்றும் பாதைகளில் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை பிரித்து அகற்றுதல், களஞ்சியப்படுத்தல், சேகரித்தல், ஏற்றி இறக்குதல், பரிகரித்தல்,

பதப்படுத்தல் மற்றும் அழித்தல்களை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை செய்தல் கட்டுப்படுத்துதல் மற்றும் சேவைக் கட்டணம் அறவிடுதற்கான ஒரு துணை விதியாகும்.

3. நகர சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவினதும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அதனைக் கழிவுகள் இன்றி ஆரோக்கியமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் பேண வேண்டும்.

4. இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபைக்குள் அமைந்திருக்கும் எந்தவொரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரும் தமது வளவினுள் உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளை சேகரித்தல், வகைப்படுத்தல், களஞ்யப்படுத்தல், ஏற்றியிறக்கல் மற்றும் அகற்றுதலுக்கு அல்லது அவ்வாறு செய்வதற்கு காரணமாய் அமைதல் வேண்டும்.

5. (i) வளவின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் தமக்குரிய வளவினுள் உருவாகும் திண்மக் கழிவினை ஒவ்வொரு நாளும் அல்லது தேவைப்பட்டால் அதனிலும் குறைந்த கால இடைவெளிகளில் கூட்டுவதன் மூலம் அல்லது ஏனைய முறைகளில் சேகரித்தல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் சேகரிக்கப்பட்ட கழிவினை இவ்விதியின் முன்னரான உபபிரிவு களுக்கும் இதனகத்துப் பின்னரான ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையிலும் வகைப்படுத்த அல்லது அவ்வகைப்படுத்தலுக்குக் காரணமாதல் வேண்டும்.

(iii) இதனகத்துப் பின்னர் துணைவிதிகள் 8 தொடக்கம் 20 வரை விபரிக்கப்படும் விதத்தில் எவரேனும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கழிவுகளை சேகரிக்க அல்லது அகற்ற பயன்படுத்தப்படும் ஏதேனும் பை, சாக்கு, வாளி அல்லது கொள்கலன்கள் நல்ல நிலையில் பராமரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை கிழிந்து, சேதமடைந்து, உடைந்து அல்லது மென்மையடைந்து அல்லது நீண்டகாலப் பாவனையால் அல்லது நியாயமான பாவனையால் அழிந்து போக அல்லது வேறு ஏதாவது காரணங்களால் துளையேற்பட்டிருப்பின் அதனைப் பயன்படுத்தப்படலாகாது என்பதுடன் நகர சபை அத்தகைய பை, சாக்கு, வாளி அல்லது கொள்கலன்களை காலத்திற்குக் காலம் மானிய விலையில் வழங்கலாம்.

(iv) உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நகர சபையால் காலத்திற்குக் காலம் பகிரங்கப்படுத்தப்படும் சேகரிப்பு முறைகள் மற்றும் நேர அட்டவணைகளுக்கு அமைவாக சேகரிக்கப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(v) உரிமையாளர், அயலவர், குடியிருப்பாளர் மற்றும் விருந்தாளிகள் ஆகியோரின் ஆரோக்கியத்திற்கு அல்லது பிரதேசத்தின் சுகாதார நிலைமைக்கு தீங்கு அல்லது சேதம் ஏற்படுத்தக்கூடிய கழிவுகளை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் சேகரிக்க அல்லது களஞ்சியப்படுத்த அல்லது அகற்ற முடியாது.

(vi) துணைவிதிகள் 10,11,12.13,15,16,17 மற்றும் 18 களில் விபரிக்கப்பட்டவாறு உரிமையாளர் சேவைக்கட்டணமொன்றை கீழே அட்டவணை 01 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்:-

(vii) துணைவிதிகள் 08, 09, 19 களில் விபரிக்கப்பட்டவாறு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளர் சேவைக்கட்டணமொன்றை கீழே அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு செலுத்துதல் வேண்டும் :-

6. (i) எவரேனும் ஒருவர் வீதியிலோ, பாதையிலோ, பொதுவழிகளிலோ, ஒழுங்கையிலோ, சாலையிலோ ஏனைய பொது இடங்களிலோ அல்லது வளாகங்களிலோ அல்லது கான், நீர் செல்லும் வழி, நீர் நிலைகள் அல்லது கடல் ஆகிய இடங்களிலோ கழிவுகளை இடவோ அல்லது இட்டு அகற்றவோ முடியாது.

(ii) எவரேனும் நபர் திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்து அதன் மூலம் சூழலை மாசுபடுத்தல் கூடாது.

(iii) எவரேனும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கழிவுகளை வகைப்படுத்துவதற்கோ, அகற்றுவதற்கோ, வெளியிடுவதற்கோ, பதப்படுத்துவதற்கோ அல்லது பரிகரிப்பதற்கோ துணைவிதி 7 இன் கீழ் அனுமதியொன்றை பெற்றிருக்கா விடின் அத்தகைய கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) 7 ஆம் துணை விதியின் ஏற்பாடுகளின் கீழ் பதப்படுத்தப்படாத தூய்மைப்படுத்தப்படாத அல்லது அகற்றப்படாத ஏதேனும் வகை மேற்குறிப்பிட்ட உபபிரிவு (iii) இன் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர் மூலம் சேகரிக்கப்படாத நிலையில் அக்கழிவுகள் 8 தொடக்கம் 20 வரையான துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கும் வகையில் அகற்றப்படுதல் வேண்டும்.

7\. (i) எவரேனும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் கீழ்காட்டப்படும் சந்தர்ப்பங்கள் தவிர, கழிவுகளை தமது வளவினுள் அழித்தல் முடியுமாதல் வேண்டும் :-

(அ) நகர சபையினால் அத்தகைய பிரதேசம் கழிவுகள் அழிக்க தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தப் படுத்தப்பட்டிருத்தல் ; அல்லது

(ஆ) நகர சபையினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கழிவுகளை அழித்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்பட்டிருத்தல்.

(ii) ஏதேனும் ஒரு வளவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நியமத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எரியூட்டல் அல்லது உலைகள் மூலம் கழிவுகளை எரிக்கலாம் அல்லது அக்கழிவுகளைப் பரிகரிக்கலாம், பதப்படுத்தலாம் அல்லது புதைக்கலாம்.

(iii) ஏதேனும் வளவினுள் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் சேகரிக்கப்படும் கழிவுகள் நகர சபையினால் அனுமதிக்கப்பட்டவாறாக பதப்படுத்தவோ அல்லது பரிகரிக்கவோ முடியும். அவ்வாறில்லாதவிடத்து நகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற சேவைக் கட்டணமொன்றை செலுத்தி நகர சபையின் கழிவு சேகரிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(iv) எவரேனும் ஒரு நபர் சபையின் முன் ஏற்பாடு ஒன்றின் அடிப்படையில் அவரின் வளவினுள் வீதி ஓரத்தினுள் அல்லது பொதுவழியொன்றின் ஓரத்தில் ஏதேனும் மரத்தை அல்லது மரத்தின் பாகத்தினை அல்லது செடியை வெட்டினால் அதன் கழிவுகளை நகர சபையின் கழிவு சேகரிப்பவரிடம் கையளித்தல் வேண்டும் என்பதுடன் அகற்றப்பட்ட கழிவின் அடிப்படையில் நகரசபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சேவைக்கட்டணத்தையும் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(v) எந்நபரும் வாகனமொன்றிலிருந்து நகர சபைப் பிரதேசத்திற்குள்ளமைந்துள்ள வீதிகள், பாதைகள் தெருக்கள் அல்லது பொதுஇடங்களில் கழிவுகளை வெளியிடவோ அல்லது குவிக்கவோ முடியாது.

(vi) வீடு அல்லது வேறு கட்டுமானம் அல்லது திருத்தம் தொடர்பாக நகர சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் குறித்த கட்டுமானக் காலத்திற்குள் உருவாக்கப்படும் திண்மக் கழிவுகளை களஞ்சியப்படுத்தல் பதப்படுத்தல், பரிகரித்தல், மற்றும் அகற்றுதல் சம்மந்தமான நிகழ்சி நிரலொன்றையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

**குடியிருப்பு வளவுகள்**

8\. (i) ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது உரிமையாளரும் வளவினுள் சேகரிக்கப்படும் கழிவுகளை கூட்டுவதன் மூலமாகவோ அல்லது ஏனைய உபாயங்கள் மூலமாகவோ பின்வமாறு வகைப்படுத்தல் வேண்டும் : -

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக்கூடிய கழிவுகள்;

(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;

(இ) பயன்பாடற்ற கழிவுகள்;

(ஈ) விசேட கழிவுகள்.

(ii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவுகளை பிரிவிட்டு பைகளில், வாளிகளில், அல்லது ஏனைய கொள்கலன்களில் சேகரித்து அவை அகற்றப்படும் வரை இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்துப் பாதுகாத்தல் வேண்டும் உப பந்தி (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிக்கப்பட்டுள்ள கழிவுகள் யாவும் எலி, பூச்சிகள் மற்றும் விலங்குகள் என்பன புகாதவாறு இறுக்கமாக மூடப்பட்ட கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும் என்பதோடு விலங்குகளின் இறந்த உடல், பாகங்கள் அல்லது விலங்குகளின் மலம் என்பவற்றைத் தாமதிக்காது நகர சபை கழிவுகள் சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் உபபிரிவு (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும், குடியிருப்பாளர் அவ்வாறு செய்யத்தவறினால் அவர் (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவையும் சேர்த்து நகர சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

9.(i) பலதரப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களைக் கொண்டு பல் மாடிக்குடியிருப்புக் கட்டங்களின் ஒவ்வொரு உரிமையாளரும் மற்றும் குடியிருப்பாளரும் பின்வருமாறு கழிவுகளை வகைப்படுத்தல் வேண்டும் அல்லது அவ்வாறு வகைப்படுத்தலுக்கு காரணமாக அமைதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்.

(ii) உபபிரிவு (i) இல் குறிப்பிடப்படும் கட்டிடமொன்றின் குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணங்கும் வகையிலான வாளிகள் அல்லது கொள்கலன்களை தம்மகத்தே கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணப்படுதல் அவர்களின் பொறுப்பாதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i) இல் குறிப்பிடப்பட்டஒரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் உபபிரிவுகள் (i) மற்றும் (ii) களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் சந்தர்ப்பத்தில் அக்கட்டடத்தின் குடியிருப்பாளரை அத்தகைய வாளிகள் அல்லது கொள்கலன்களை குறிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் தம்மகத்தே கொண்டிருக்க அறிவுறுத்தவோஅல்லது குடியிருப்பாளர்கள் அவ்வாறு செயற்பட காரணமாக அமையுமாறு உரிமையாளர்களை அறிவுறுத்தவோ நகரசபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் நகரசபையின் அறிவித்தலுக்கு இயைந்து ஒழுகுதல் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஆகியோரின் கடமையாதலும் வேண்டும்.

(iv) ஒரு தளத்தின் அல்லது ஒருமாடியின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் வகைப்படுத்தப்பட்ட கழிவை அதற்கென பொருத்தமான வாளி அல்லது கொள்கலனுள் போடுதல் வேண்டும்.

(v) இத் துணை விதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றுவது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரின் கடமையாகும், அத்தகைய கழிவுகள் அவ்வாறு அகற்றப்படாதவிடத்து அவற்றை (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்ட கழிவுவகைகளுடன் சேர்த்து நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**கடைகளும் அலுவலகங்களும்**

10. (i) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளரும் ஒவ்வொரு கட்டடத்திலும் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாரு வகைப்படுத்தல் வேண்டும்

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்.

(ii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் தனித்தனியான வாளிகள் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் களஞ்சியப்படுத்தப்படலும் வேண்டும்.

(iii) ஒரு கடை அல்லது அலுவலகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) வில் குறிப்பிடப்பட்ட கழிவுகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

(iv) பல தளங்கள் மற்றும் மாடிகளுடன் கூடிய ஒரு அலுவலகக் கட்டடம் அல்லது ஒரு கடைத்தொகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொரு கடைக்கும் அலுவலகத்திற்கும் தேவையான எண்ணிக்கையானதும் நகரசபையின் அங்கீகாரத்துக்கும் விவரணத்துக்கும் தரத்துக்கும் இணங்கும் வகையிலானதுமான கழிவு வாளிகள் மற்றும் கொள்கலன்களை சேகரித்து வகைப்படுத்தப்பட்ட கழிவைப் இடுவதற்கு வழங்குதல் வேண்டும்.

(v) இந்த துணைவிதியின் உபபிரிவு (iv) இல் குறிக்கப்பட்டவாறான எந்தவொரு கடையின் அல்லது அலுவலகத்தின் ஓர் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் பிரிக்கப்பட்ட கழிவை தனித்தனியான வாளிகளில் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் உப பிரிவு (i) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவுவகைகளையும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரிடம் கையளிக்க உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு உரிமையுண்டு. அவ்வாறு சேகரிக்கப்படாத கழிவுகளை நகர சபை கழிவு சேகரிப்பவரிடம் கையளிக்கலாம்.

(vii) கடையில், அலுவலகத்தில் பணிபுரியும் நபர்கள் அல்லது அயலவர்களுக்கு சுத்திகரிப்பு பிரச்சினை மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படாவண்ணம் கழிவுகளை அகற்றுதல், இத்துணைவிதிகளில் விபரிக்கப்பட்ட வாளிகள் மற்றும் கொள்கலன்களைப் பராமரித்தல் எவையேனும் கடைகள் மற்றும் அலுவலகங்களின் அனைத்து உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்களினது பொறுப்பாகும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

" குடியிருப்பாளர்" என்பது, நகர சபைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கடையின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அல்லது ஒரு அலுவலகம் அல்லது வியாபாரத்தின் பொறுப்பாளர் என்பதாகும்.

" அலுவலகம்" என்பது, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க (அத்தியாயம் 129) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில் வழங்கப்பட்ட அதே அர்த்தத்தைக்கொண்டிருக்கும்.

" கடை " என்பது சில்லறை மற்றும் மொத்த வியாபாரத்திற்காக பொருட்களை வைத்திருக்கும் இடம்.

**உணவகங்கள்**

11. (i) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் வளவில் சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்.

(ii) எந்தவொரு உணவக உரிமையாளரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் பிரிக்கப்பட்ட கழிவுகளை தனித்தனியாக பொருத்தமான வாளிகள் அல்லது கொள்கலன்களில் இடவேண்டும் என்பதுடன் ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அவை அகற்றப்படும் வரை பொருத்தமான இடத்தில் அவற்றைக் களஞ்சியப்படுத்துதலும் வேண்டும்.

(iii) எந்தவொரு உணவக உரிமையாளர்களும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு நபரும் உணவுக், கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் மூடியுடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது கொள்கலனில் பாதுகாப்பான வகையில் பொதி செய்தல் வேண்டும்.

(iv) இந்தத் துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(v) உபபிரிவு (i) இல் காட்டப்பட்ட ஏதேனும் கழிவுகள் உபபிரிவு (iv) இன் பிரகாரம் கையளிக்கப்படாத விடத்து நகர சபைக்கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

" உணவகம்" என்பது, உறங்குவதற்குரிய வசதியுடன் கூடியது அல்லது இல்லாத மற்றும் பணக் கொடுப்பனவின் மீது நுகர்வதற்காக குடிபானங்கள், உணவுகள் அல்லது மதுவகைகள் என்பவற்றை வழங்கும் விடுதி, ஓய்வு அறை, வாடிவீடு, யாத்திரை ஓய்விடம், சோறு, கறி வழங்கும் கடை, உணவுச்சாலை மற்றும் ஒரு உணவகத்தைப் போன்று வியாபாரம் நடத்தும் ஒரு இடத்தைக் குறிக்கும்:-

**மரக்கறி மற்றும் பழக் களஞ்சியங்கள் கடைகள்**

12. (i) ஒவ்வொரு மரக்கறி அல்லது பழக் களஞ்சியம் அல்லது கடைகளுக்குப் பொறுப்பான உரிமையாளர் அல்லது நபர் அவரது வளவிலுள்ள சேகரிக்கப்பட்ட கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்.

(ii) இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் உலோகத்தினால் அல்லது பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட ஒரு கொள்கலனில் பிரித்து வைத்திருத்தல் வேண்டும், ஏனைய கழிவுகள் பொருத்தமான வாளி அல்லது ஏனைய கொள்கலனுள் இடப்படல் வேண்டும்.

(iii) இத்துணை விதியின் உபபரிவு (i) விடயம் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம், அவ்வாறு கையளிக்கப்படாத ஏதேனும் கழிவுகள் நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

வேறு வகையாக தேவைப்படுத்தப்பட்டாலன்றி இந்தத் துணை விதியின் நோக்கத்திற்காக:-

" மரக்கறி மற்றும் பழக் களஞ்சியம்" என்பது, மரக்கறி மற்றும் பழங்களை விற்பதற்காக அல்லது களஞ்சியப்படுத்துவதற்காக வைத்திருக்கும் இடத்தைக் குறிக்கும்.

**மீன், கோழி மற்றும் முட்டை விற்பனைக் கடைகள்**

13. (i) மீன் அல்லது கோழி அல்லது முட்டை விற்பனைக் கடைகளை நடத்தும் உரிமையாளர் அல்லது நபர் அவர்களின் கழிவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) மனித நுகர்விற்குப் பொருந்தாத கழிவுகள் மற்றும் கழிவுகளின் பகுதிகள் அல்லது முட்டைகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்;

(ii) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டு (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் ஒரு தனிப்பட்ட கொள்கலனிலும், (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் நன்றாக பாதுகாக்கப்பட்டதும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தா வண்ணமும் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புதுவதைத் தடுக்கும் வகையிலுமான தனியான கொள்கலனில் இட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(iii) இந்தத் துணைவிதியின் உபபிரிவு (i) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படலாம். அவ்வாறு ஒப்படைக்கப்படாத அத்தகைய கழிவுகளையும் இத்துணைவிதியில் விடயங்கள் (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளையும் சேர்த்து நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறாக ஒரு சேவைக்கட்டணத்தை நகரசபையில் செலுத்தியதன் பேரில் துர்நாற்றம் பரவும் அத்தகைய சந்தர்ப்பத்திற்கு முன்னர் நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக;

" மீன், கோழி இறைச்சி அல்லது முட்டை விற்பனைக் கடை" என்பது, களஞ்சியப்படுத்த அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அத்தகைய இடத்தைக் குறிப்பதாகும்.

**நடைபாதை வியாபாரம்**

14. (i) நகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எந்தவொரு நடைபாதை வியாபாரியும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுதல் ஆகாது.

(ii) இத்துணைவிதியின் உப பிரிவு (i) இன் கீழ் எவரேனும் ஒரு நபருக்கு நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு கட்டணத்தை நகரசபை அறவிடுவதன் பேரில் ஒரு தற்காலிக் அனுமதிப்பத்திரத்தை வழங்கலாம் என்பதுடன் நகரசபை உத்தேச வியாபாரத்துக்கான நாட்களையும் உருவாக்கப்படும் கழிவுகளின் கொள்ளளவையும் கவனத்திற்கொண்டு சேவைக்கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துமாறு தற்காலிக அனுமதிப்பத்திரக்காரரை வேண்டிக்கொள்வார்.

(iii) உப பிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் முடிவில் நகரசபை அறவிடப்படவேண்டிய உண்மையான சேவைக்கட்டணத்தை உபபிரிவு (ii) இன் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்திலிருந்து கழித்துக்கொண்டு மீதித்தொகையை அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்குவார்.

(iv) ஒரு நடைபாதை வியாபாரத்தின்போது வெளியேற்றப்படும் அத்தகைய கழிவுகளுக்காக நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட தரத்துடனும் விவரணத்துடனும் இணைந்த வகையிலான ஒரு வாளியை அல்லது ஏனைய கொள்கலனை அனுமதிப்பத்திரதாரர் வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அத்தகைய கழிவுகள் எதனையாவது நடைபாதை ஓரத்திலோ அல்லது பெருந்தெருக்களிலோ அல்லது பொது இடத்திலோ போடக்கூடாது.

(v) எந்த நடைபாதை வியாபாரியும் பாதசாரிகளினது அல்லது வாகனங்களது நடமாட்டத்தைத் தடை செய்யும் வகையில் உபபிரிவு (iv) இல் விபரிக்கப்பட்ட ஒரு வாளியையோ அல்லது ஏனைய கொள்கலனையோ அத்தகைய பாதையில் வைக்கக் கூடாது.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் அவரது வியாபாரத்தின் காரணமாக உருவாக்கப்படும் கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) விசேட கழிவுகள்;

(vii) வகைப்படுத்தப்பட்ட அத்தகைய கழிவுகளை ஒவ்வொரு நடைபாதை வியாபார அனுமதிப்பத்திரதாரரும் பொருத்தமான வெவ்வேறு வாளிகள் அல்லது கொள்கலன்களில் இடுதல் வேண்டும். இத் துணைவிதியின் உபபிரிவு (vi) விடயம் (அ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவுகள் பாதுகாப்பாக எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் உட்புகாவண்ணம் வாளி அல்லது கொள்கலனுள் இட்டு மூடிப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

(viii) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் இத்துணைவிதியின் உபபிரிவு (vi) விடயங்கள் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்டவாறான அத்தகைய நாளாந்த கழிவு வகைகளை, ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம், அவ்வாறில்லாதவிடத்து அல்லது நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

" நடை பாதை வியாபாரி" என்பது நடைபாதை ஓரத்திலோ அல்லது வீதி ஓரத்திலோ பொருட்களை குவித்து அல்லது பரப்பி அல்லது காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் அல்லது சேவை வழங்கும் ஒரு நபரைக் குறிக்கும்.

**தொழிற்சாலைகள்**

15. (i) ஒரு தொழிற்சாலையின் ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது உற்பத்தியாளரும் அவரது தொழிற்சாலையின் மூலம் உருவாக்கப்படும் கழிவை சேகரித்து தொழிற்சாலையின் வளவினுள் பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்;
(ஈ) தீங்கு விளைவிக்கும் கழிவுகள்;

(ii) இத் துணைவிதியின் (i) ஆம் உபபிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) விடயங்களில் குறிக்கப்பட்ட அனைத்து கழிவு வகைகளையும் ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும், அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகளில் இத்துணை விதியின் உபபிரிவு (i) விடயம் (ஈ) வில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய கழிவுகளை நகர சபை கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கலாம்.

(iii) தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகளை அந்த வியாபாரத்திற்காக 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க அகற்ற முடியும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக

" தொழிற்சாலை" என்பது 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 128) அர்த்தப்படுகின்ற அதே அர்த்தத்தைக் குறிக்கும்.

**அகழ்வு, நிர்மாணம் மற்றும் தகர்ப்பு**

16. (i) எரிவாயு, மின்சாரம், நீர், தொலைபேசி வசதிகள் அல்லது அதுபோன்ற வேறு ஏதேனும் பொது வசதிகளை வழங்குகின்ற நோக்கத்திற்காக ஏதேனுமொரு பொது இடம், வீதி அல்லது தெருவை அகழ்கின்ற, நிர்மாணிக்கின்ற அல்லது அதனோடு தொடர்புடைய தகர்ப்பு வேலைகளைச் செய்கின்ற எவரேனும் நபர் நகரசபையிடம் இத்துணைவிதியின் தேவைப்பாடுகளுக்கிணங்க எழுத்துமூல முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் இப்பணிகளின் விளைவாக உருவாக்கப்படும் கழிவுகளை அகற்றுதல் தொடர்பில் ஒரு கழிவகற்றல் திட்டத்தையும் நகரசபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் நகரசபையின் அத்தகைய எழுத்து மூல அங்கீகாரம் சொல்லப்பட்ட கழிவகற்றல் திட்டத்தையும் உள்ளடக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக அமைதலும் வேண்டும்.

(ii) அத்தகைய செயற்பாடுகளினால் உருவாக்கப்படுமென உத்தேசிக்கின்ற கழிவின் அளவு மற்றும் அத்தகைய கழிவை அகற்றுவதற்காக ஏற்படும் உத்தேச செலவீனம் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு நகரசபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு தொகைப்பணத்தை சேவைக்கட்டண முற்பணமாக செலுத்துதலும் வேண்டும்.

(iii) உபபிரிவு (i) இன்கீழ் பெற்றுக்கொண்ட அங்கீகாரத்தின் பிரகாரம் எவரேனும் நபர் கழிவு முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அகற்றுவதற்குத் தவறினால் அல்லது அலட்சியம் செய்தால் நகரசபையின் தீர்மானத்திற்கமைய அத்தகைய கழிவுகள் நகர சபையால் அகற்றப்படுவதுடன் அதன் பெறுபேறாக நகர சபைக்கு ஏற்பட்ட செலவீனம் உபபிரிவு (i) இன் கீழ் வைப்புச் செய்யப்பட்டுள்ள முற்பணத்திலிருந்து சரி செய்யப்படும் என்பதுடன் மேலதிக செலவீனம் ஏதுமிருப்பின் அது குறித்த நபரிடமிருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக அறவிடப்படும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக;

''அகழ்வு, நிர்மாணிப்பு அல்லது தகர்ப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்'' என்பது அச்செயற்பாடு பாரப்படுத்தப்பட்டுள்ள எவரேனும் ஒப்பந்தக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் நபரையும் உள்ளடக்கும்.

''கழிவு'' என்பது கட்டட நிர்மாணத்தின்போது உருவாக்கப்படுகின்ற கல், மணல், சேறு, மரத்துண்டுகள், இரும்புத் துண்டுகள் மற்றும் அதன்போது கழிக்கப்படுகின்ற ஏனைய பொருட்களையும் உள்ளடக்கும்.

**வைத்தியசாலைகள்**

17. (i) அரச வைத்தியசாலைகள் தவிர்ந்த அனைத்து தனியார் வைத்தியசாலைகளும் நகர சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அனைத்து வைத்தியசாலைகளும் அதன் வளவினுள் உருவாக்கப்படும் கழிவை பின்வருமாறு வகைப்படுத்தல் வேண்டும் அல்லது வகைப்படுத்தக் காரணமாக அமைதலும் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவு;
(இ) பயன்பாடற்ற கழிவு;
(ஈ) தீங்கு விளைவிக்கும் சுகாதாரப் பராமரிப்புக் கழிவு

(ii) உபபிரிவு (i) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) வில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகள் அவை முறையாக அகற்றப்படும் வரை தனித்தனியான கொள்கலன்களில் இடப்பட்டு பொருத்தமான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உபபிரிவு (i) விடயம் (ஈ) இல் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை, அந்த நோக்கத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வாளி அல்லது ஏதாவது கொள்கலனில் இட்டு அவற்றை வைப்பதற்கான நோக்கில் உருவாக்கப்பட்ட இடத்தில் வைக்க வேண்டும் என்பதுடன் அது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கவன்றி அவை அகற்றப்படவோ அல்லது பரிகரிக்கப்படவோ கூடாது.

(iii) இந்த துணைவிதியின் உபபிரிவு (i) விடயம், (அ), (ஆ) மற்றும் (இ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஓர் அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும் அவ்வாறில்லாதவிடத்து நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும்.

வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணை விதியின் நோக்கத்திற்காக:

"வைத்தியசாலை" என்பது மனிதனுக்கான தாதிச் சேவை மற்றும் சிகிச்சை அல்லது நோயினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஒரு விலங்கினத்திற்கு சிகிச்சை என்பவற்றை உள்ளடக்கும் தனியார் வைத்தியசாலை, கிளினிக், மருத்துவ நிலையம், மருத்துவ ஆய்வுகூடம், பிரசவ விடுதி மற்றும் மிருக வைத்தியசாலை என்பன அமைந்துள்ள ஏதேனும் ஒரு வளாகம்.

"தீங்குவிளைவிக்கும் சுகாதாரபராமரிப்புக் கழிவு" என்பது மருத்துவக் கழிவு, உடற் பகுதிகள், தொற்று மற்றும் உயர் தொற்றுக் கழிவுகள் மற்றும் கூர்மைக் கழிவுகளை உள்ளடக்கும்.

### அறுவை மடுவங்கள் மற்றும் இறைச்சி விற்பனை

18.(i) எவரேனும் நபர் கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 272) ஏற்பாடுகளுக்கமைவாக நகர சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி இறைச்சி வியாபாரம் செய்வதற்கோ அல்லது விலங்குகள் எதனையும் அறுவை செய்வதற்கோ முடியாது.

(ii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமானது விலங்குகளை அறுவை செய்வதற்கு அனுமதிக்கப்படும் விலங்கறுமனை, அறுவை செய்யக்கூடிய விலங்குகளின் வகை, விலங்கறுமனை அமைக்கப்படுகின்ற முறை மற்றும் அதனை தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் இரத்தம் மற்றும் மனித உணவுக்குப் பயன்படாத ஏனைய உடற்பாகங்கள் தொடர்பான தீர்மானங்கள் சபையினால் சரியானதென காலத்திற்குக்காலம் எடுக்கப்படுகின்றவைகளாக அமைதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கின்ற அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்நபரும் இதனகத்துப் பின்னர் "அனுமதிக்கப்பட்டவர்" கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும்.

(அ) விலங்கு உடலின் உட்பகுதிகள், முடி, பாதப்பகுதி (குறை), எலும்புகள், சமிபாடடையாத மூலங்கள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்.

(iv) இத்துணை விதியின் உபபிரிவு (iii) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) களில் குறிப்பிடப்பட்ட கழிவு வகைகளை வேறுபடுத்தி அதன் ஈரப்பதன் கசியாதவாறு கொள்கலன்களில் இடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதனுள் கொசு, எலி, பூச்சிகள் அல்லது ஏனைய விலங்குகள் புகாவண்ணம் முறையான பாதுகாப்புடன் கூடியதாக வைத்திருத்தல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் உபபிரிவு (iii) விடயம் (அ), (ஆ) மற்றும் (இ) களில் குறிக்கப்பட்டவாறான கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்க முடியும். அவ்வாறு கையளிக்கப்படாத கழிவுகள் நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் ஒப்படைக்கப்படலாம்.

(vi) அறுவை மடுவங்களில் அறுவையின்போது வெளியேற்றப்படும் அழுக்கு நீர்க்கழிவு 1980 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பராமரித்தல் வேண்டும்.

வேறு வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி இத் துணை விதியின் நோக்கத்திற்காக:

"அறுவை மடுவங்கள்" என்பது கசாப்புக்கடைகள் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 272) அர்த்தப்படுத்தப்பட்டுள்ள அதே அர்த்தத்தை கொண்டிருக்கும்.

"கசாப்புக்கடை" என்பது இலங்கையில் அறுவை செய்யப்பட்ட விலங்குகளின் இறைச்சியை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தும் இடம் எனப்படும்.

**ஏனைய வளவுகள்**

19. (i) துணை விதிகள் இலக்கம் 8 தொடக்கம் 18 வரையானவற்றில் குறிப்பிடப்படாத ஒரு வியாபாரத்தை நடத்தும் எந்தவொரு நபரும் அல்லது பொது மக்கள் பங்குபற்றலுடன் ஒரு சமய சமூக கலாச்சார அல்லது கல்வி நடவடிக்கையை செயற்படுத்துகின்ற மற்றும் ஒழுங்கு படுத்துகின்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஒரு தாபனத்தின் பராமரிப்புக் காரணமாக ஏற்படுகின்ற கழிவுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

(அ) உணவுக் கழிவுகள் மற்றும் உயிரியல் ரீதியில் பிரிகையடையக் கூடிய கழிவுகள்;
(ஆ) மீண்டும் பயன்படுத்தக்கூடிய மற்றும் சுழற்சி முறையான கழிவுகள்;
(இ) பயன்பாடற்ற கழிவுகள்
(ஈ) விசேட கழிவுகள்.

(ii) உபபிரிவு (i) இல் குறிப்பிட்டவாறான ஏதாவது நடவடிக்கையின் எந்த அமைப்பாளரும் அத்தகைய செயற்பாடு தொடர்பில் முன்கூட்டியே நகரசபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும் என்பதுடன் நகரசபை அத்தகைய செயற்பாட்டிலிருந்து உருவாக்கப்படும் கழிவுகளை சேகரிப்பதற்கு விசேட ஒழுங்குகளை மேறகொள்ள முடியும். அத்தகைய கழிவு சேகரிப்பு காலத்துக்குக் காலம் சபையால் தீர்மானிக்கப்படுகின்றவாறான ஒரு சேவைக் கட்டணத்திற்கிணங்கியதாக அமையும்.

(iii) வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் அகற்றப்படும் வரை தனித்தனி கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டு பொருத்தமான இடத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் உபபிரிவு (i) இல் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) களில் குறிக்கப்பட்ட கழிவு வகைகளை ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது நகர சபைக் கழிவு சேகரிப்பவரிடம் நகர சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஒரு சேவைக் கட்டணத்தைச் செலுத்தவதன் மூலம் ஒப்படைக்கலாம்.

**வீதிகளும் பொது இடங்களும்**

20. (i) செயலாளர், தலைவரது ஆலோசனையுடனும் நகர சபையின் அங்கீகாரத்திற்கிணங்க கீழ்க்காட்டப்படும் விடயங்களைத் திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

(அ) சபை எல்லைக்குள் வரும் வீதிகள், பொது இடங்கள், வாகனப்போக்குவரத்துச் சாலைகள், பொதுவடிகான்கள், நீர் செல்லும் வழிகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றின் தூய்மையை மற்றும் சுகாதாரத் தன்மையைப் பேணுதல்.
(ஆ) அனைத்து பொது இடங்களிலும் மற்றும் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் போதிய அளவிலான கழிவகற்றல் கொள்கலன்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.

(இ) விழாக்கள், விசேட நிகழ்வுகளின்போது பொது இடங்களில் வைப்பதற்கு அல்லது சபையால் தீர்மானிக்கப்பட்ட ஏதாவதொரு நிகழ்விற்கு வழங்க நகர்த்தக்கூடிய கழிவு வாளிகளை வழங்குதல்.

(ஈ) சுகாதாரத் தன்மையைப் பேணுமுகமாக குடியிருப்புப் பகுதிகளில் பொதுக் கழிவு வாளிகளை அல்லது கொள்கலன்களை நிறுவுதல் அவற்றுள் இடப்பட்ட கழிவுகளை அயலிலுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தொல்லையற்ற வகையில் அகற்றுதல் மற்றும் திட்டமிடல்.

(உ) மேலே பந்திகளில் குறிப்பிட்டவாறான நடவடிக்கைகள் தொடர்பில் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரித்தல் மற்றும் உடனடி நடவடிக்கை எடுத்தல்.

### நகர சபையின் கடமைகள்

21.(i) செயலாளர் தலைவரது ஆலோசனையுடனும் நகர சபையின் அங்கீகாரத்திற்கிணங்கவும் பின்வருவனவற்றை திட்டமிட, மேற்பார்வை செய்ய, கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க முடியும்:-

(அ) கழிவுகளை குறைப்பதற்கும் மீண்டும் பாவிப்பதற்கும் சுழற்சி முறையாக பாவிப்பதற்கும் மக்களை ஊக்குவித்தல்,

(ஆ) கழிவை வகைப்படுத்தல், சேகரித்தல், சேர்த்துவைத்தல், அகற்றல் மற்றும் அழித்தல் தொடர்பில் ஊடகங்களினூடாக மக்களுக்கு அறிவூட்டல் விழிப்புணர்வை ஏற்படுத்தல்,

(இ) மீள்பாவனை மற்றும் சுழற்சிமுறை நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிப்பட்டவர்கள் சிறுமுயற்சியாளர்களுக்கு உதவுதல்,

(ஈ) கழிவைக் குறைத்தல், மீள்பாவனை, சுழற்சிமுறைப் பாவனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்,

(உ) மாற்றுக் கழிவகற்றல் முறைகளை ஒழுங்குபடுத்தல்,

(ஊ) கழிவுகளை வகைப்படுத்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் உச்சப்பயன் பெறக்கூடியதானதும் நகர சபையினால் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கும் விவரணத்திற்கும் எண்ணிக்கைக்கும் அமைவாக பைகள், சாக்குகள், வாளிகள் மற்றும் கொள்கலன்களை உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு விநியோகித்தல்.

(எ) வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகைக் கழிவுகளை நகர சபையினால் அகற்றுவது தொடர்பாக கழிவு சேகரித்தல் அட்டவணை ஒன்றை சேகரிப்புத் தினங்கள், நேரங்கள், முறைமைகள் மற்றும் சேவைக்கட்டணங்கள் மற்றும் விடுமுறை தினங்களையும் உள்ளடக்கியதாக தயாரித்தல்.

(ஏ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத ஏதாவது பிரிக்கப்பட்ட கழிவை அட்டவணைக்கிணங்க நேரத்திற்கு சேகரிப்பதற்கு,

(ஐ) அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்களிடம் கையளிக்கப்படாத தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவு மற்றும் ஏனைய கழிவுகளை முறையாக எடுத்துச் செல்வதற்கு,

(ஒ) தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் நகரசபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய கழிவுகள் தவிர்ந்த, வீதிகளைக் கூட்டுவதன் மூலமாகவும் வடிகான்களை, பொதுத் இடங்களை சுத்தப்படுத்துவதன் மூலமாகவும், நகர சபை ஊழியர்களால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பொது தொட்டிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகளை அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பாளர்களிடம் ஒப்படைத்தல்,

(ஓ) நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிராகாரம் நகர சபைக் கழிவு சேகரிப்பவரினால் சேகரிக்கப்பட்டு வகைப் படுத்தப்பட்ட அனைத்து உணவு மற்றும் உயிரியல் சேதனக்கழிவுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மீள்பாவனை மற்றும் மீள்சுழற்சிக் கழிவுகள் மற்றும் வீட்டுக்கழிவுகளை நடைமுறைச் சாத்தியமான வகையில் கையாளுதல், பதப்படுத்தல் மற்றும் பரிகரித்தலுக்கான நடவடிக்கை எடுத்தல் தொடர்பிலும் இச்செயற்பாட்டினால் நிராகரிக்கப்படுகின்ற மற்றும் மீதமாகின்ற கழிவுகள் தொடர்பில் தீர்மானம் எடுத்தல்.

(ஔ) மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கலந்தாலோசித்து, நகரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அனைத்து தீங்குவிளைவிக்கக் கூடிய கழிவுகளை அகற்றுதல்,

(ஃ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கும் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் அல்லது வேறு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க கழிவுகளை எரித்தல் மற்றும் சுத்திகரிப்பு நிலக்குழியில் நிரப்புதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,

(க) கழிவுகளைக் கூட்டுதல், சேகரித்தல், வகைப்படுத்தல், பரிகரித்தல், கொண்டு செல்லல், மாற்றுதல் மற்றும் அழித்தல் நடவடிக்கைகளில ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பு உடை, கையுறை, வாயுறை மற்றும் காலணிகளை வழங்குவதற்கு,

(ச) வீடு ஒன்றை அல்லது வேறு ஏதும் கட்டுமானங்களை நிர்மாணிக்கின்ற அல்லது திருத்துகின்ற சந்தர்ப்பத்தில் நகர சபைக்கு விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும்போது இச்செயல் காரணமாக உருவாக்கப்படுகின்ற கழிவுகளை ஆரம்பம் முதல் முடிவுறும் வரையில் களஞ்சியப்படுத்தல், பரிகரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான வேலைகளை பரிசீலனை செய்தல், அங்கீகரித்தல்,

(ட) சபைக்கான ஓர் உள்ளக கழிவு முகாமைத்துவ திட்டத்தைத் தயாரிப்பதற்காக,

(த) திண்மக் கழிவகற்றல் தொடர்பான தேசியக் கொள்கைகள் மற்றும் அதனோடு தொடர்பான சட்டவாக்கங் களுக்கமைவாக திண்மக் கழிவுமுகாமைத் திட்டம் ஒன்று ஆகக் குறைந்தது வருடாந்தம் தயாரித்தல் மற்றும் மூன்று வருடங்களுக்கு முன்கூட்டியே இறுதிக் கழிவகற்றல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் மற்றும் அத்திட்டம் தொடர்பில் வருடாந்தம் நகர சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

(ப) உபபிரிவுகள் (அ) தொடக்கம் (த) வரை காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை விசாரித்து முன்னுரிமைப்படுத்தி தீர்மானம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தல்.

**அனுமதிப் பத்திரங்கள்**

22. கழிவுகளை மீள்பாவனை செய்யும் அல்லது சுழற்சிப் பயன்பாட்டில் ஈடுபடும் அல்லது கூட்டெரு தயாரிப்பில் ஈடுபடும் அல்லது உயிரியல் வாயு தயாரிக்கும் எவரேனும் நபருக்கு நகர சபை அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும், அந்நபர்;

(அ) நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டதும் இத்துணை விதியின் உட்பிரிவுகளின் படி இந்நகர சபை பகுதிக்குள் அல்லது ஏனைய வேறு உள்ளூர் அதிகாரசபைப் பகுதிக்குள் ஒரு வியாபாரத்தை நடத்துபவராதல்,

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பவராதல்,

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுகள் சார்பாக நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறான தரத்துடன் கூடியதாக நிர்மாணிக்கப்பட்ட கழிவு சேகரிப்பு இடத்தைக் கொண்டிருத்தல்,

(ஈ) நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டவாறாகவும் மக்களுக்குத் தொல்லையற்ற சுகாதார முறையிலும், சேகரிக்கப்பட்ட கழிவைக் கொண்டு செல்வதற்காக வாகனங்களை வழங்கக் கூடியவராகவிருத்தல்,

(உ) பரிகரித்தல் அல்லது பதப்படுத்தல் நடவடிக்கைகளின்போது உருவாக்கப்படும் அல்லது நிராகரிக்கப்படும் மற்றும் வீட்டுக்கழிவுகளை நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு சேவைக் கட்டணத்தை எப்பிரதேச எல்லைக்கு அத்தகைய நடவடிக்கை இடம்பெறுகின்றதோ அந் நகர சபைக்குச் செலுத்தி கையளிக்க உடன்படுதல்,

(ஊ) நகர சபையால் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான கோரிக்கை மறுக்கப்படுகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான காரணம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு சபையால் எழுத்துமூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(எ) நகர சபை அனுமதிப்பத்திரத்தில் அது செல்லுபடியாகும் காலம், சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு வகை அல்லது வகைகள், அத்தகைய கழிவகளைச் சேகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசம் மற்றும் ஏனைய பொருத்தமான நிபந்தனைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஏ) நகர சபை அனுமதிப்பத்திரத்தை இத்துணைவிதியின் உபபிரிவு (i) இன் ஏற்பாடுகளுடன் இணங்காத பட்சத்தில் குறித்த அனுமதிப்பத்திரத்தை மீளப்பெறலாம்.

(ஐ) பந்தி (ஏ) இன் பிரகாரம் அனுமதிப்பத்திரம் மீளம் பெறப்பட்டிருப்பின் எந்நபரும் கழிவுகளை சேகரிக்கவோ அல்லது பெற்றுக் கொள்ளவோ முடியாது. இச்சந்தர்ப்பத்தில் செயலாளர் அத்தகைய மீளப் பெறுகை தொடர்பாக பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**கழிவை அழிக்கும் பிரதேசங்கள்**

23. (i) நகர சபையினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக அதிகாரமளிக்கப்பட்டவர் அல்லது அவரால் அங்கீகாரம் வழங்கப்பட்டவர் தவிர்ந்த வேறு எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஒரு நபர் கழிவகற்றல் பிரதேசத்தினுள் நடமாடவோ அல்லது எவையேனும் பொருட்கள், குப்பைகளை இடவோ, சேர்த்து வைக்கவோ அல்லது அங்கிருந்து அகற்றவோ முடியாது.

(ii) அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் எழுத்து மூல அங்கீகாரமின்றி நகர சபையின் எல்லைகளுக்கு வெளியே ஏதேனும் காணிகளில் அல்லது இடங்களில் உருவாக்கப்படுகின்ற கழிவுகளை நகர சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள காணிகளில் அல்லது அதற்குரிய ஏற்பாட்டிடங்களில் இடவோ, பராமரிக்கவோ அல்லது பயன்படுத்தவோ முடியாது.

**ஏனையவை**

24.(i) செயலாளர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபருக்கும் நியாயமான எல்லா நேரங்களிலும் இத்துணை விதிகளின் ஏற்பாடுகளுடன் இயைந்த வகையில் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செயற்படுகின்றாரா எனப் பரிசோதிப்பதற்கும் ஏதாவது வளவினுள் நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.

(ii) உரிமையாளர், குடியிருப்பாளர், கண்காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வசிக்கும் எந்தவொரு நபரோ அல்லது அவ்வளவினுள் வேலை செய்பவரோ செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எந்தவோரு உத்தியோகத்தரோ தேவைப்படுத்தப்படும் போது தகவலை வழங்கவேண்டும்.

(iii) செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு இத்துணைவிதிகளின் கீழ் அவரது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் போது எந்த நபரும் அதனைத் தடை செய்ய முடியாது.

(iv) இத்துணைவிதிகளின் ஏதாவது ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படும் எந்தவொரு நபரும் நகர சபைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குற்றம் இழைத்தவராகக் கருதப்படுவார்.

**மீறல்களும் தண்டனைகளும்**

25. (i) இவ்நகர சபை எல்லைக்குள் ஏதேனும் ஒரு நபர் இத்துணைவிதிகளின் ஏற்பாடு ஒன்றையோ பலவற்றையோ மீறுவது அல்லது அலட்சியம் செய்வது செயலாளரின் எழுத்து மூல அறிவித்தல் ஒன்றின் பேரில் நீதவான் நீதிமன்றினால் கீழே விபரிக்கப்படும் தண்டப்பணங்களை விதிக்கப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்.

(அ) ஏதாவது ஒரு அத்தகையமீறுகை அல்லது அலட்சியம் தொடர்பாக தண்டப்பணம் ரூபா எழுநூற்றி ஐம்பது ;

(ஆ) அத்தகைய மீறுகை அல்லது அலட்சியம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற காலத்துக்குள் நாளொன்றுக்கு மேலதிக தண்டப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பது.

**பொருள் கோடல்**

26. வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி இத்துணை விதிகளின் நோக்கத்திற்காக:-

''அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவர்'' என்பது இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் கழிவைச் சேகரிப்பதற்கும் பெறுவதற்கும் செயலாளரிடமிருந்து ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவர்.

''அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் '' என்பது இத்துணைவிதிகளின் கீழ் அத்தகைய கடமைகளைச் செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு செயலாளரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்டவர்.

''வாளி அல்லது வேறு கொள்கலன்கள்'' என்பது இத்துணைவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலான கழிவை வைத்திருக்க, அகற்ற, சேகரிக்க அல்லது கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாளி, கைப்பிடியற்ற பை, பை ஏனைய கொள்கலன் என்பவற்றை உள்ளடக்கும்.

''உயிரியல் சேதனக் கழிவு'' என்பது நுண்ணங்கிகளால் பிரிகையடையும் அல்லது அழிவடையும் கழிவைக் குறிக்கும்.

''சேகரிப்பு'' என்பது அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பவரால் அல்லது நகர சபைக்கழிவு சேகரிப்பவரால் ஏற்றியிறக்க, மீள்பாவனைப்படுத்த, மீள்சுழற்சிக்காக, பரிகரிப்புக்காக, பயன்படுத்துவதற்காக கழிவுகள் சேகரிப்பதனைக் குறிக்கும்.

''கூட்டெரு'' என்பது நுண்ணங்கிகளால் சேதனமடைந்த கழிவின் கடைசி உற்பத்தி மற்றும் அது ஒரு மண்ணை வளப்படுத்தும் ஒரு பசளையாகும்.

''அகற்றல்'' என்பது ஒரு நபரால் அல்லது வளவுகளால் உருவாக்கப்படும் கழிவுகளின் அனைத்து பகுதிகளையும் வளவினுள் அல்லது வெளியே அல்லது ஒரு அதிகாரமளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பவரிடம் அல்லது நகர சபை கழிவு சேகரிப்பவரிடம் கொடுப்பதற்கு வைத்திருப்பதாகும்.

''அழித்தல்'' என்பது நிலத்தின் மீது அல்லது நிலத்தினுள் மீள்பாவனை, சுழற்சி செயற்படுத்தல், அல்லது பரிகரித்தல் போன்றவற்றுக்காக கழிவை நிரந்தரமாக வைப்பதற்கு உத்தேசித்துள்ள தளம்.

''கட்டணம்'' என்பது நகர சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற சில கட்டணங்கள்.

''உணவுக் கழிவு'' என்பது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற அனைத்து இறைச்சி, மீன், முட்டைகள், மரக்கறி, பழங்கள் மற்றும் உண்ணக்கூடிய பொருட்களைக் குறிப்பதாகும்.

''தீங்கு விளைவிக்கக் கூடிய கழிவு'' என்பது நஞ்சூட்டக் கூடிய, கதிர் விளைவை ஏற்படுத்தக்கூடிய, இயற்கையில் தொற்றை ஏற்பாடுத்தக்கூடிய கழிவு.

''விசேட கழிவு'' என்பது பௌதீக அல்லது இரசாயன தன்மை கொண்டதும் அல்லது இரண்டும் சேர்ந்த தன்மைகளை கொண்டதும், நகரசபை, இடிபாடுகள், கட்டுமான மற்றும் மரக் கழிவுகளிலிருந்து வேறுபடுவதும் விசேட கையாளுகை தேவைப்படுவதுமான நெறிமுறைப்படுத்தப்படாத அபாயகரமான கழிவுகள் விசேட கழிவுகள் என கொள்ளப்படும்.

''உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்'' என்பது வளவின் உரிமையாளர் அல்லது அவர் சார்பாக அற்றோனித்தத்துவம் கொண்டிருக்கும் முகவர் அல்லது கைத்தொழிலை, தொழிற்சாலையை, தோட்டத்தை முகாமைத்துவம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பாளர் அல்லது இன்னொரு நபரின் கட்டளைப்படி இயங்கும் ஒரு முகாமையாளர், இவ்வகுதிக்குள் அடங்காத வாடகைக் குடியிருப்பாளர் ஆகியோரைக் குறிக்கும்.

''நகர சபை'' என்பது காத்தான்குடி நகர சபையைக் குறிக்கும்.

''நகர சபை பிரதேசம்'' என்பது ஏதேனும் நகர சபை பிரதேசத்திற்கென ஸ்தாபிக்கப்பட்ட நகர சபையின் கீழ்வருகின்ற அதன் நிர்வாகப் பிரதேசமாகும்.

''நகர சபை கழிவு சேகரிப்பவர் '' என்பது நகர சபையால் கழிவை சேகரிக்க, கூட்ட, வாளி அல்லது கொள்கலனில் இருந்து அகற்ற அல்லது அத்தகைய கடமைகளைச் செய்ய நகர சபையுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நபர் அல்லது ஒரு தொழிலாளி.

''பொது இடம்'' என்பது ஒரு வீதி, மைதானம், பொதுக் காணி, ஒதுக்கப்பட்ட வீதி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டடம், மயானம், நீர் செல்லும் வழி, கடல், கடற்கரை அல்லது பொது மக்களால் பாவிக்கப்படும் ஏதாவது இடத்தைக் குறிக்கும்.

''சுழற்சிக்கழிவு'' என்பது கழிவின் மூலம் புதிய பொருட்களை உருவாக்குவதைக் குறிக்கும். இதனால் நீண்டகாலத்தில் அவை கழிவாகக் கருதப்படாது.

''பயன்பாடற்ற கழிவு'' என்பது உயிரியல் சேதனக்கழிவாகக் கருதப்படாத மற்றும் மீள்பாவனை, சுழற்சிக் கழிவாகக் கருதப்படாதவையாகும்.

''மீள்பாவனைக் கழிவு'' என்பது பாவித்த பின் கழுவி அல்லது தூய்மைப்படுத்தி மீள்பாவனை செய்யக் கூடியது.

''சுத்திகரிப்பு நிலக்குழி'' என்பது சமூகத்துடன் இணைந்த, சுகாதர மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கு இலங்கைத் தரத்திற்கு ஏற்ற விதத்துக்கிணங்க கழிவை அழிக்கும் ஒரு தளம்.

''செயலாளர்'' என்பவர் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 27 (1) ஆவது பிரிவிற்கு அமைவாக நியமிக்கப்பட்ட ஒரு செயலாளர் ஆவார்.

''வகைப்படுத்தல்'' என்பது இத்துணைவிதிகளில் கழிவகற்றல் தொடர்பில் பயன்படுத்தப்பட்ட பிரிவுகளிற்கு இணங்க பிரிக்கப்பட்ட வெவ்வேறு வகைக் கழிவுகள்.

''சேவைக் கட்டணம்'' என்பது நகர சபையின் கழிவு முகாமைத்துவ சேவையைப் பயன்படுத்துபவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களைக் குறிக்கும்.

''திண்மக் கழிவு'' என்பது நுகர முடியாத, கைவிடப்பட்ட மற்றும் தூசி, குப்பை, சாம்பல் போன்ற கழிவுகளைக் குறிக்கும்.

''வீட்டுக் கழிவு'' என்பது சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மற்றும் விசேட கையாளுகை, கொண்டு செல்லல், பரிகரித்தல், அகற்றல், முறைகளை தேவைப்படுத்தும் கழிவு.

''களஞ்சியப்படுத்தல்'' என்பது ஒரு உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வளவினுள் அல்லது பொது சேகரிப்பு நிலையமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு பகுதியினுள் கழிவை வைத்திருத்தல்.

''இடமாற்றல் நிலையம்'' என்பது நகர சபையால் இந்த நோக்கத்திற்காக ஏதாவது மீள்பாவனை, செயற்படுத்தல், பரிகரித்தல் அல்லது அகற்றல் வசதிக்கு மாற்றல் நிலையத்திலிருந்து கழிவை திறன்மிகுந்த முறையில் கொண்டு செல்வதை முன்னேற்றுகின்ற நோக்கத்திற்காக கழிவை சிறிய வாகனத்திலிருந்து பெரிய வாகனத்திற்கு மாற்றுவதற்குரிய இடம்.

''போக்குவரத்து'' என்பது மனித, விலங்கு, இயந்திர சக்தியைப் பிரயோகித்து கழிவு சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது பயன்படுத்தப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதைக் குறிக்கும்.

''பரிகரித்தல்'' என்பது மக்களுக்கு அல்லது சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்கை அல்லது சேதத்தை குறைப்பதற்கு செயற்படுத்தப்படும் அல்லது எடுக்கப்படும் நடவடிக்கையைக் குறிக்கும்.

**அட்டவணை 01**

சேவைக் கட்டணங்கள்

| உபவிதிகள் 10, 11, 12, 13, 14, 15, 16, 17 மற்றும் 18 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் வகை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேவைக் கட்டண விபரம் | உப விதி 10 இன் கீழ் (ரூபா) | உப விதி 11 இன் கீழ் (ரூபா) | உப விதி 12 இன் கீழ் (ரூபா) | உப விதி 13 இன் கீழ் (ரூபா) | உப விதி 14 இன் கீழ் (ரூபா) | உப விதி 15 இன் கீழ் (ரூபா) | உப விதி 16 இன் கீழ் (ரூபா) | உப விதி 17 இன் கீழ் (ரூபா) | உப விதி 18 இன் கீழ் (ரூபா) |
| கிலோ ஒன்றிற்கான சேவைக் கட்டணம் | 3.5 | 3.5 | 3.5 | 3.5 | 2 | 4.5 | 2 | 10 | 3.5 |

**அட்டவணை 02**

**சேவைக் கட்டணங்கள்**

| உபவிதிகள் 8, 9 மற்றும் 19 களின் கீழ் வகைப்படுத்தப்படும் உரிமையாளர்கள் வகை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேவைக் கட்டண விபரம் | உப விதி 8 இன் கீழ் (ரூபா) | உப விதி 9 இன் கீழ் (ரூபா) | உப விதி 19 இன் கீழ் (ரூபா) | | | | | | |
| ட்ரக்டர் ஒன்றிற்கான சேவைக் கட்டணம் | 3500.00 | 3500.00 | 3500.00 | | | | | | |

# நானாவித அறிவித்தல்கள்

## ரத்கம பிரதேச சபை

*வியாபார உத்தரவுச் சீட்டு பெற்றுக் கொள்வதற்கான கட்டணம் அறவிடல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 147 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற அச் சட்டத்தின் 149 ஆவது பிரிவின் கீழ் ரத்கம பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ரத்கம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடாத்திச் செல்லும் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு தொழிற்சாலைக்காகவும் அதன் அட்டவணையில் II ஆவது நிரலில் ஒவ்வொரு தொழிற்சாலை நடாத்திச் செல்லும் இடத்திற்கு வருடாந்த இடத்திற்கான மதிப்பின் தொடர்புடைய நெடுவரிசையில் குறிக்கப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வணிக உரிமக் கட்டணம் 2019 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவிட வேண்டும் என்றும் அதன் தொழில்துறை உரிமங்களின் கீழ் 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் தொழில்துறை உரிமங்களின் கீழ் ஒரு நபர் ரத்கம பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என்று ரத்கம பிரதேச சபையின் தலைவர் ரீ. நிமல் ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி தீர்மானம் செய்யப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.*

*ரீ. நிமல்,*
*தலைவர்,*
*ரத்கம பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரத்கம,*
*2018, ஒகத்து 06.*

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. பேக்கரி ஒன்றினை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. சோற்றுக்கடை சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. தேநீர், கோப்பிக் கடை நடாத்திச் செல்லுதல் (இருப்பு 05க்கு மேல்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. உணவகம் ஒன்றினை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. இளைப்பாறும் இடம் ஒன்றினை நடாத்திச் செல்லுதல் (அறை 03 க்கு மேல்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. மீன் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. மாட்டிறைச்சி தவிர வேறு இறைச்சி வகை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. ஹோட்டல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. பால் உற்பத்தி நிலையம் நடாத்துதல் (பால் பண்ணை) | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. சிகை அலங்காரம் செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. ஐஸ் தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. சலவை நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. குளிரூட்டியில் வைத்து இறைச்சி விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. பால் பண்ணை | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. பேக்கரி தயாரிப்பு விநியோகித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. விலா அல்லது கடற்கரை கூடாரம் நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. ஸ்னெக் பார் ஒன்று அல்லது குளிர் பானம் விற்பனை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |

அந்த அட்டவணையில் குறிப்பிட்ட தொழிற்சாலை வியாபாரம் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் செயல்களுக்காக அந்த ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை விடுதி இலங்கைச் சுற்றுலா சபையின் பதிவு செய்யப்பட்ட பெயர் அல்லது அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அவ்வாறு செய்யப்பட்ட அதன் கட்டணம் அறவிடப்படும் ஆண்டுக்கு முந்தைய ஆண்டு வருவாய் அந்த வருமானத்தில் 1% ஆக இருக்க வேண்டும்.

**அட்டவணை**

**அபாயகர வியாபாரம்**

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. | இயந்திரமாக்கப்பட்ட லற்றைப் (இரும்பக களிமண்) கிரவல் சரளைக்கல் கருங்கல் உடைத்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | லற்றைப் (இரும்பக களிமண்) கிரவல் சரளைக்கல் கருங்கல் களஞ் சியப்பத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | செங்கல் சூளை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | ஓடு, சூளை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | முச்சக்கரவண்டி சுத்திகரிக்கும் வேலைத்தளம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | மோட்டார் சைக்கிள் சுத்திகரிக்கும் வேலைத்தளம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | தீப்பெட்டி உற்பத்தி செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | இயந்திரமாக்கப்படாத லற்றைப் (இரும்பக களிமண்) கிரவல் சரளைக்கல் கருங்கல் உடைக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. | மெதிலேட் திரவியங்கள் ஸ்பிரிட் வகை களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | தும்பு அல்லது நார்களிலான பொருட்கள் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | ஐஸ் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | ஐஸ் களஞ்சியப்படுத்துதல் விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | தானிய வகைகள் அல்லது இறைச்சி வகை 05 டொன் தொகை களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | நகை தயாரித்தல் அல்லது புதுப்பித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | எரிபொருள் மூலம் செயற்படும் இயந்திரம் உபயோகித்து பலகை கிழிக்கும் மர பலகைகள் களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | இயந்திர உபகரணங்களை உபயோகித்து கிழிக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் (இயந்திரங்கள் இல்லாமல்) | 500.00 | 750.00 | 1000.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 18. | புதிய அல்லது பழைய உபயோகித்த, இறப்பர் டயர் அல்லது டியுப் 50 க்கு மேலான தொகை களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | சில்க் சேர்க்கை புடவை நைதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | அச்சு நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | கை போர மூலம் கலு கல் உடைக்கும் ஆலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | நெல் ஆலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | மினிரன் துப்புறவு செய்யும் விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | பசளை அல்லது இரசாயன பசளை உற்பத்தி செய்தல், களஞ்சியப் படுத்துதல், விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | கோழிகள் 500 இக்கு மேல் தொகைக்காக கோழிப்பண்ணை உட்பட கொரடு நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | செம்மறி ஆடு, ஆடு அல்லது பன்றி 10 இக்கு மேல் தொகையைக் கொண்ட கொட்டகை அல்லது தொழுவம் நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | கோழி 100 இக்கு மேல் கோழிப் பண்ணை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | தோல் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | தோற்பொருட்கள் பதனிடும் நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | இறப்பர் தயாரிக்கும் களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | பாக்கு தயாரிக்கும் களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | வைத்திய இரசாயன கூடம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | மர வேலை நிலையமொன்று அல்லது மரப்பலகை நிலையம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | ஏஸடிக் எஸிட் வகை தயாரிக்கும் களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | வினாகிரி தயாரிக்கும் களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | சுண்ணாம்புக் கல் அல்லது சுண்ணாம்பு களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | சுண்ணாம்பு விரட்டி சுடுதலுக்காக அல்லது தயாரிக்கும் களஞ்சியப் படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | சோடா தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | தோற் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | இயந்திர உதவியுடன் தானிய வகைகள் மற்றும் இறைச்சி வகைகள் அரைக்கும் ஆலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | பேகிங் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | கருங்கல் வெடிக்க வைக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | பெதிக் புடவை தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 45. | இரசாயன பொருட்கள் உபயோகித்து (கருவா, கராபுநெடி) ஏலக்காய் அல்லது எலுமிச்சம் வகை தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | வாணவேடிக்கை உபகரணங்கள் மற்றும் பட்டாசு விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | பெட்ரி சாஜ் செய்தல் அல்லது திருத்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | மோட்டார் வாகனம் திருத்தும் மற்றும் மோட்டார் வாகனம் சுத்திகரிக்கும் வேலைத்தளம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | தோணி தயாரித்தல், திருத்தல் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 50. | இயந்திர உதவியுடன் உலோக சிதைவுகள் செய்யும் தாபனம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 51. | தகடு, வேலைத்தளம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 52. | விவசாய இரசாயன பொருள் தயாரித்தல், களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 53. | வரி முட் கம்பி தயாரித்தல் அல்லது கம்பி விநியோகிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 54. | வாயு இயந்திரம், குளிரூட்டி பெட்டி, அதி குளிரூட்டி (டிபிரிஸர்) தயாரித்தல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் திருத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 55. | இயந்திர உபகரணங்கள் தயாரித்தல் விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 56. | ஈயம் பெட்டரி சாஜ் பண்ணுதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 57. | ரேடியேட்டர் தயாரித்தல் அல்லது விற்பனை நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 58. | இறப்பர் புகையடித்தல் புகை வீடு நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 59. | சவப்பெட்டி சாப்பு ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 60. | கடைச்சல் பட்டரை பயன்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 61. | பைபர் கிளாஸ் சேவைத்தளம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 62. | ஸியஸ்டா மெத்தை தயாரித்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 63. | வாயு சிலிண்டர் களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 64. | நூல் சாயம் பண்ணும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 200.00 | 300.00 | 550.00 |
| 65. | மின்வலுவால் செயற்படும் அச்சக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 66. | கைஇயந்திரம் மூலம் செயற்படும் அச்சகம் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 67. | கொப்பரா தயாரித்தல் அல்லது சமைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 68. | கெலும் 50 க்கு மேல் தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 69. | தேங்காய் எண்ணெயை தவிர வேறு மரக்கறி எண்ணெய் வகை கெலுன் 12 க்கு மேல் அளவு களஞ்சியப்படுத்துதல் விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 70. | தொகையாக விற்பனைக்காக பழுதடையும் சிறு சாப்பாட்டு வகை மற்றும் ஆகார வகை களஞ்சியப்படுத்துதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 71. | கால் நடை உணவு மற்றும் கோழி தீன் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 72. | பல வகை விற்பனை செய்யும் பல சரக்குக் கடை ஒன்றினை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 73. | வெற்றிலை, பாக்கு, பீடி, சுருட்டு, மட்பாண்டம், கயிறு, விலக்குமாறு, விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 74. | மீன் தொட்டி நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 75. | சமூக சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 76. | கீரை வகை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 77. | கடலை, நிலக்கடலை விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 78. | மசகு எண்ணெய் விற்பனை செய்யும் நிலையம் (சில்லறை) | 500.00 | 750.00 | 1000.00 |

**விரும்பத்தகாத வியாபாரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | தேயிலைப் பெட்டி அல்லது பலகைப் பெட்டி தயாரித்தல், களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல், நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | கையால் மரம் கிழிக்கும் ஆலை அல்லது கிழிக்கும் ஆலை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | சுண்ணாம்புக் கல் அல்லது சுண்ணாம்புக் கல் அரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | இயந்திர உபகரணம் உபயோகித்து கொல்லன் பற்றரை (கிரில் வேலை) நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | அலங்காரப் பொருட்கள் வர்ணமூட்டுதல் செய்வதற்காக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 200.00 | 300.00 | 500.00 |
| 06. | கை இயந்திரம் அன்றி வேறு விதத்தில் பிடவை தயாரித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | கை இயந்திரம் அன்றி வேறு விதத்தில் நூல் கட்டுதல் அல்லது நைதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | சதுர அடி 50 இருந்து 500 வரை பலகை மடுவத்திற்காக | | | 50.00 |
| 09. | சதுர அடி 501 இருந்து 751 வரை பலகை மடுவத்திற்காக | | | 75.00 |
| 10. | சதுர அடி 751 இருந்து 1000 வரை பலகை மடுவத்திற்காக | | | 100.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 11. | சதுர அடி 1001 இலிருந்து 1500 வரை பலகை மடுவத்திற்காக | | | 150.00 |
| 12. | சதுர அடி 1501 பலகை மடுவத்திற்காக | | | 200.00 |
| 13. | சதுர அடி 2001 பலகை மடுவத்திற்காக | | | 300.00 |
| 14. | தோற் பொருட்கள் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | மாசி தயாரித்தல் அல்லது உறை 5 க்கு மேல் அளவு களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | மிருக வைத்திய மருத்துவ மனை அல்லது பரிகாரம் செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | கருவாடு, உப்பு மீன் அல்லது ஜாடி அல்லது 30 க்கு மேல் அளவு களஞ்சியப்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | மீன் அல்லது ஜாடி போடுதல், உலர்த்துதல், ஐஸ் போடுதலுக்காக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | கால் நடை உணவு களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | புண்ணாக்கு தொன் 1 க்கு மேல் அளவு களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | கால்நடை உணவு மற்றும் கோழி தீன் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | கொன்கிரீட் அல்லது மேட் பயிப்ப களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | சிரப் அல்லது பழச்சாறு வகை தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | இனிப்புப் பண்டம் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | தென்னங் கள் சேகரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 250.00 | 500.00 | 750.00 |
| 26. | சுண்ணாம்புக் கல் உடைக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | பாணி தயாரிக்கும் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 100.00 | 200.00 | 300.00 |
| 28. | வர்ணமூட்டும் தீந்தை, வார்னிஸ், டிஸ்டெம்பர், சாயம் அல்லது அதன் உறை 05 க்கு மேல் தொகை களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | பலகை தயாரித்தல் அல்லது பலகை பக்குவப்படுத்தல் (பதம்) செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | கைத்தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மை | ரூ. 750 க்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 750 இற்கு கூடிய மற்றும் ரூ. 1,500 இற்கு கூடாத சந்தர்ப்பம் | ரூ. 1,500 இற்கு கூடிய சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 30. | நார் வர்ண மூட்டுதல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | பழங்கள் மீன் வகை அல்லது வேறு உணவு வகை டின்களில் அடைக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | கோப்பி, தானிய வகை, இறைச்சி வகை, தூள் வகை, மா அரைப்பதற்காக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | யோகட், குடிவகை பொதி தயாரித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | வாசனைத் திரவியம் தயாரிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | கல் தயாரித்தல், மெருகூட்டுதல், அரைத்தல் என்பதற்காக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | பாடசாலை கரும்பலகை தயாரித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | குளிரூட்டப்பட்ட இறைச்சி, மீன் களஞ்சியப்படுத்துதல் விற்பனை செய்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக் கல் தயாரித்தல் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | பிடவை அச்சு பண்ணுதல் அல்லது நிறமூட்டும் (பதிக்) வேளைத்தளம் நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | சுறா இறகை தயாரித்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | மின் கலன் மின்னூட்டுதல் அல்லது திருத்தல் செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | ஓட்டுப் போடுதல் வேலைத் தளம் அல்லது கிரில் வேலைத்தளம் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | சில்லறை பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | ஐஸ் கிரீம் தயாரித்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | ரயர் ரியூப் ஒட்டு போடும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | மேலைத் தேய (ஆங்கில) மருந்து பொருட்கள் விற்பனை (பாமஸிஸ்) அல்லது சிகிச்சை அளிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | ஆயுர்வேத மருந்து வகை விற்பனை அல்லது சிகிச்சை அளிக்கும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | கறுவா எண்ணெய் (பெகிரி தெல்) மடுவம் ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 50. | அப்பியாச புத்தகம் தயாரித்தலுக்காக நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 51. | விற்பனைக்காக மீன் வளர்த்தல் அல்லது மீன் தொட்டி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 52. | மலர்சாலை ஒன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 53. | மொத்தமாக அல்லது சில்லறையாக முட்டை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1000.00 |

| நிரல் I | | நிரல் II வளாகத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
